உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௫ { பிரமாதி, கார்த்திகை } மலர் ௮

க. மெய்ப்பாட்டியல் 293
திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L.

உ. பிராட்டிக்கிராவணன் தோட்டபழியுண்டா? 302
திரு. R. பொன்னுசாமிபிள்ளை அவர்கள்

௩. வள்ளல் கண்டீரக்கோப்பெருநள்ளி (நாடகம்) 309
திரு. சிவ. துப்புசாமி அவர்கள்

௪. தொல்காப்பியமும் சங்கநூல்களும் 320
வித்துவான் திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள் B.O.L.

௫. வரவேற்பு வாழ்த்து 331

௬. நன்கொடைகள் 332
பொழிற்றொண்டர்

பொழிற்றொண்டர்:
செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ۲ரு | பிரமாதி, கார்த்திகை | மலர் ۶ |

## மெய்ப்பாட்டியல்

திருவாளர், S. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M. A., B. L.,
பசுமலை

(முற்றொடர்ச்சி, துணர்: 15, மலர்: 6, இதழ்: 212)

சூத்திரம் 2

நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.

கருத்து :— இது முன்னதற்கோர் புறனடை; மேல் முதற் சூத்திரம் கூறும் எண்ணான்குமே யன்றிச் செய்யுட்பொருளாம் மெய்ப்பாட்டுணர்வுகள் வேறுமுளவென்பது கூறுகிறது.

பொருள் :— நாலிரண்டாகும் பாலுமா ருண்டே=செய்யுளுறுப்பாம் மெய்ப்பாட்டுணர்வுகள், மேற்கூறியாங்கு நந்நான்காய் எண்வகை இயனெறி பிழையாது வருவனவுமன்றி, எவ்வெட்டாய்த் தொக்கு வகைப்பட வருவன பிறவும் உள.

குறிப்பு :— ஈற்றேகாரம், முதலிற் கூறிய எண்ணான்கினின்றும் வேறும் உள்ளன பிரித்தலின் பிரிநிலை; ஈற்றசை எனினும் அமையும். ஆகும் என்னும் வினைக்குச் செய்யுளுறுப்பாம் மெய்ப்பாட்டுணர்வுகள் எனும் எழுவாய், கொண்டபொருட்டொடர்பால் அவாய் நிலையாயிற்று.

முன், முதற் சூத்திரத்தில் மெய்ப்பாட்டுணர்வாம் எண்வகைச்செய்யுட்பொருளும் நந்நான்காய்த் தொகைஇ வருமெனச் சுட்டியதற் கேற்ப, அவ்வாறு தொக்க எட்டும் இதன் பின்,

> "நகையே அழுகை.....................உவகை யென்
> றப்பா லெட்டே மெய்ப்பாடு"

எனத் தொகுத்துக் கூறப்பட்டு, அதன் பின் அவ்வெட்டன்

வகையாய்ப் பிரித்தெண்ணப்படுவன முப்பத்திரண்டும்முறையே எள்ளல் முதல் விளையாட்டீறாக விரிக்கப்படுகின்றன. அதுவே போல் வேறு எவ்வெட்டாய்த் தொகுத்து எண்ணப்படும் இயல்புடைய முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும், முன் "அப்பா லெட்டே" எனவும், இங்கு 'நாலிரண்டாகும் பாலுமா ருண்டே' எனவும் சுட்டியதற்கேற்ப, முதல் எட்டன் வகை முப்பத்திரண்டும் எள்ளல் முதல் விளையாட்டீறாய் முறையே எண்ணி முடிந்த பின் "ஆங்கவை யொருபா லாக வொருபால்" எனத் தொடங்கி "உடைமையின்புறல்........நடுக்கெனா, இவையும் உளவே அவையலங் கடையே" எனவும் எண்ணி முடித்துக் காட்டப்படுதலின் இச்சூத்திரப்பொருள் இதுவாதல் தெற்றெனவிளங்கும். இச்செம்பொருளைவிட்டு இதுசுட்டும் நாலிரண்டும் பின் "நகையே அழுகை" என எண்ணப்படும் எட்டுமே ஆமென்பாருரை கொள்ளின், அச்சூத்திரமே "அப்பாலெட்டே மெய்ப்பா டென்ப" என அவற்றின் எண் தொகுத்துக் கூறுதலானும், முதற் சூத்திரத்தும் "நானான்காய் எண்ணான்கு பொருளாம்" என அவற்றின் எண்வகை குறிக்கப் பெறுதலானும், இச்சூத்திரம் இங்கு வேண்டப்படாது மிகைபடக் கூறலாய் முடியுமென்பது ஒருதலை. ஆதலின், அதுபொருளன்மை யறிக.

இனி, உய்த்துக் கொண்டுணர்தல் (இரட்டுறமொழிதல்) எனும் உத்தியால் இச்சூத்திரத்துக்குப் பிறிதும் ஒருபொருள் கொள்ளுதலும் பொருந்தும். இதில் "நாலிரண்டு" என்பதை உம்மை தொக்க கூட்டெண்ணாக்கி, நாலுமிரண்டு மெனக்கூட்டி, அறுவகைப்படும் இயல்புடைய அகத்துறை மெய்ப்பாடுகளும் உளவெனப் பொருள் கூறி, அவ்வாறும் முறையே "புகுமுகம் புரிதல்.........தகுமுறை நான்கே ஒன்றென மொழிப" எனத் தொடங்கி "புலம்பிய நான்கே ஆறென மொழிப" எனஎண்ணி முடிக்கும் மெய்ப்பாட்டு வகை ஆறுமாமென அமைத்துக் கோடலும் தவறாகாது.

**சூத்திரம் 3**

> நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
> றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.

**கருத்து :**—இது, முன் முதற் சூத்திரத்தில் அகவுணர்ச்சிச் செய்யுட்பொருள் முப்பத்திரண்டும் புறத்தே இயலொத்த இனம்பற்றி நந்நான்காய்ப் பண்ணையிற் றோன்றுமெனச்சுட்டிய மெய்ப்பாட்டு வகையெட்டும் இன்னவென விளக்குகிறது.

பொருள் :—நகை = சிரிப்பு ; அழுகை = அவலம்; இளிவரல் = இடும்பை, அஃதாவது துன்பம்; மருட்கை = மயக்கம்; அச்சம் = அஞ்சுதல்; பெருமிதம் = வீறு அஃதாவது தருக்கு; வெகுளி = சினம்; உவகை = மகிழ்ச்சி ; என்று அப்பாலெட்டே மெய்ப் பாடென்ப = என அத்தன்மைய மெய்ப்பாடு எட்டேயா மென்பர் புலவர்.

குறிப்பு :— 'நகையே' என்பதில் ஏகாரம் எண் குறிக்கும். 'எட்டே' என்பதில் ஏகாரம் தேற்றமாம். இதில் தொகுதியிற் புறத்திற்ருேன்றும் மெய்ப்பாடுஎட்டும், இதையடுத்து இவற்றின் வகைவிரிகளான எள்ளல் முதல் விளையாட்டீருக முப்பத் திரண்டும்கூறிப் பின் இவற்றை 'ஆங்கவைஒருபாலாக' எனச்சுட் டிப்பிரித்து நிறுத்தி 'ஒருகால் எனத்தொடங்கி வேறுமுப்பத்தி ரண்டு மெய்ப்பாட்டுணர்வுவகை குறிப்பதனுல், இவை நந்நான் காய் எண்ணப்படும் பான்மையாதல் ஒருமுறை; இதன்பின் பிற எவ்வெட்டாய்த் தொகுத்து எண்ணப்படும் தன்மையவாதல் மற்ருெரு முறை யென்பது தொல்காப்பியரின் குறிப்பாம். அதனுல் இதிற் கூறப்படுவன நாலுநாலாய்த் தொக்கு அம் முறையில் எண்ணப்படும் எட்டாம் என்பது விளங்க, பால் தன்மையைக் குறிப்பதாகலின், இம்மெய்ப்பாடுகள் "அப்பா லெட்டே" எனக் குறிக்கப்பட்டன. ஈற்றில் 'என்ப' எனும் வினைக்குப் 'புலவர்' எனும் எழுவாய் அவாய்நிலை.

இனி, இம்மெய்ப்பாட்டுமுறை, பிற ஆரியநூல்வழக்கொடு படாமல் என்றும் இயற்றமிழ்ச் செய்யுளூறுப்பாய்த் தொன்று தொட்டு நின்று நிலவும் மரபிற்ருகும். இவ்வுண்மை இச்சூத் திரத்தின்கீழ் "இதூஉ பிறர்வேண்டுமாற்ருனன்றி இந்நூலுள் இவ்வாறு வேண்டப்படும் மெய்ப்பாடு என்பது உணர்த்துதல் நுதலிற்று" என, பேராசிரியரே கூறுதலானும் விளங்கும். இவற்றின் இயல் வகைவிரிக்கும் பிற சூத்திரங் களானும் இது விளங்கும். அன்றியும் ஆரிய நூலார் கூறும் நவரசங்கள் இம்மெய்ப்பாடுகளின் வேருய் நாடக நாட்டியச் சத்துவங்களாம். அவை முறையே சிருங்காரம், ஹாஸ்யம், கருணை, ரௌத்திரம், வீரம், பயம், குற்சை, அற்புதம், சாந்தம் என்பனவாம்.

இவற்றுள், முதலில் நிற்கும் சிருங்காரம் கற்புக் கருதாக் காமக்களி. அதைச் செய்யுளிற் கொள்ளத்தகும் ஒரு பொருளாகத்தமிழ்ப்புலவர் கருதிற்றிலர். அவர் கூறும் உவகை

யெனும் மெய்ப்பாடு, முறையே அறத்தான்வரும் செல்வம், கல்வியான் எய்தும் அறிவு, கற்புறு காதற்கூட்டம், திளைத்தற்குரிய தூயவிளையாட்டு, இந்நான்காணும் வரும் மகிழ்ச்சியாகும். சிருங்காரத்தை இவ்வுவகையோடு ஒப்பிட ஒல்லாமை கருதி உவகைவகை நாலுள் ஒன்றாய தூய காதற்கூட்ட மலிவோடு உறழ்வித்து அமைதிகாட்ட முயல்வர் பழைய உரைகாரர். உயர்திணைக் குரிப்பொருளாய் இருதலை ஒருவயின் ஒத்தஅன்புக் கூட்டத் தூயமகிழ்ச்சியும், பிறனில் பெட்டல் முதலிய தீமையிற் றீரா, கற்பொடு படூஉம் கடப்பாடு கருதாச் சிற்றின்பத் திளைப்பும் தம்முள் ஒவ்வாமை வெளிப்படை. இனி, ஹாஸ்யம் நால்வகை நகையைமுற்றிலும் ஒவ்வாமையும் தெற்றெனத்தெளியப்படுவதாகும். கருணை, தமிழ்அருள், அல்லது அளியாமல்லால், அழுகையாகாமை தேற்றமாம். அயலார் அல்லலுக்கு இரங்குவது அளி அல்லது கருணையாம்; அழுகையோ, தம்மால் தாங்கரும் இழிபு, இழவு, தளர்வு, வறுமைகளால் வருந்துதலாகும். எமப் புணைசுடும் இரௌத்திரமும் தனக்குத் தீங்கிழைத்த பிறர்மாட்டுச்செல்லும் சினமாம். உறுப்பறுதல் முதல் கொலைவரை நாலும் தன்னைச் செய்யினும், பிறரைச் செய்யினும் ஒப்ப நிகழும் மனவுணர்வு வெகுளியாகும். வீரம் என்பது பெருமிதம் நான்கனுள் ஒன்றாம் தறுகண்மையில் அடங்கும். பேராண்மைப்பெற்றியிற் குறையாத இறவாச் சிறப்பீயும் கல்வி, புகழ், கொடைகளான் எய்தும் மலிவொடு பொலியும் பெருமிதம் கேவலம் வீரத்தின் வேறுதல் வெளிப்படை. குற்சை என்பது அருவருப்பு. இதனை எனைத்து வகையானும் தமிழ்ச் சான்றோர் செய்யுளில் எஞ்ஞான்றும் மெய்ப்பாட்டுப் பொருளாகக் கொண்டிலர். அற்புதம், மருட்கை வகையில் ஒன்றாயடங்கும். சாந்தம் பிறிது உணர்வு ஒன்றும் அற்ற வெறுநிலை ஆதலின் அது மெய்ப்பாடாகாமை தேற்றம். அதனை உள்ளத்துரனுல் கொள்ளப் புணரும் உணர்வான நடுவு நிலையெனும் தமிழ்ச்செய்யுட் பொருளொடு ஒப்பது போலக் கூறுவர் உரைகாரர். சமனிலை அல்லது சாந்தி, உணர்வும் குறிப்பும் ஒன்றுமற்ற வெறுநிலை; எனவே அன்மைப்பொருளது. நடுநிலை:—தகுதி எனும் அறமாகும்; நேர்மைசுட்டும் உண்மைப் பொருட்டாம். இவை தம்முள் இயல் ஒவ்வாமை கண்கூடு; அந்நடுவுநிலையும் இப்பாலெட்டு மெய்ப்பாட்டுவகையில் இசையாமல் பின் வேறொரு பாலாம் முப்பத்திரண்டனுள் வைத்து எண்ணப்படுதலானும், அது மற்று எட்டனோடு கூட்டி எண்ணப்பெறும் சாந்தமாகாமை ஒருதலை.

சூத்திரம் 4

எள்ளல், இளமை, பேதைமை, மடனென்று
உள்ளப்பட்ட நகைநான் கென்ப.

**கருத்து:—** இது, முன் சிறந்த செய்யுட்பொருளாம் எண்ணுணர்வும் கண்ணியபுறனே நானான்காய்ப் பண்ணைத் தோன்றி "எட்டே மெய்ப்பாடா" மெனத் தொகுத்தவற்றுள், முதல் தொகுதியாம் நகை வகை நான்கும் அவற்றினியல்பும் கூறுகிறது.

**பொருள்:—** எள்ளல்=நகைமொழி அல்லது கேலி; இளமை=மழவு; அஃதாவது குழவித் தன்மை; பேதைமை= அறிவின்மை; மடம்=ஏழைமை அஃதாவது தேராது எளிதில் நம்பு மியல்பு; என்று உள்ளப்பட்ட நகை நான்கென்ப=இந் நான்கும் நகையின்வகை நான்காய்க் கருதப்படு மென்பர் (உள் ளூறும் உணர்வை நுண்ணிதி னுணரும் புலவர்.)

**குறிப்பு:—**எள்ளல், இழித்தலின் வேறுபட்ட நகைமொழி; பழிப்பில் பரிகாசம்; அஃதாவது உளேவியா விளையாட்டுஎச்சுப் போல்வது. 'இழிவு' பின் சூத்திரத்தில் அழுகைவகைத் தாய் வேறு கூறப்பெறுதலின், இங்கு நகைவகையுளொன்றெனப் படும் 'எள்ளல்' இழியாச் சிரிப்பாதல் தேற்றம்.

"ஊரன், எம்மிற் பெருமொழிகூறித் தம் இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவை போல,
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே"

எனும் ஆலங்குடி வங்கனாரின் குறும்பாட்டில் (குறுந்-8) காதற் பரத்தை தான் பாராட்டும் வள்ளற்றலைவனை எள்ளுவதறிக.

"ஒண்டொடீ! நாணிலன் மன்ற இவன்;
ஆயினஎ !
பல்லார்நக் கெள்ளப்படுமடன்மா வேறி
மல்லலூராங் கட்படுமே, நறுநுதல்
நல்காள் கண் மாறிவிடின் எனச் செல்வானும்
எள்ளிநகினும் வரூஉம், இடையிடைக்
கள்வர் போல் நோக்கினும் நோக்கும்"

எனும் (61) குறிஞ்சிக்கலியில், பராவுதற்குரிய தலைவனைத் தோழி எள்ளல் காண்க.

"மகளிர்
நலனுண்டு துறத்தி யாயின்
மிக நன்றம்ம மகிழ்ந! நின்சூளே"

எனும் ஓரம் போகியார் குறும்பாட்டினும் (குறுந் 384) பரவுந் தலைவனை இழியாமல் எள்ளுவதறிக.

" நகையாகின்றே தோழி......
மம்மர்நெஞ் சினேன் தொழுது நின்றதுவே " (அகம் 56)

எனுமகப்பாட்டடியுமதுவே. இளமை, அறிவுமுதிராக் குழவித் தன்மை. பேதைமை, அறிவின்மை (Stupidity) ; மடம் ஆராயாது ஐயுறாது நம்புமியல்பு (Simplicity or innocence) பேதைமை உவர்ப்பிக்கும்; மடம், உவப்புதவும். எள்ளல்முதல் நான்கும் மகிழ்வொடு மருவும் பெற்றிய ; இதனை " நகையெனப்படுதல் வகையாதெனினே,..................நகையொடு நால்வகை நனிமகிழ் வதுவே", என்ற தொல்லை நல்லுரையானுமறிக.

புறத்தே நகையாய் முகிழ்க்கும் குறி ஒன்றே அகத்து நிகழுமிந் நால்வகை யுணர்வும் தோற்றற் கேற்றதொரு மெய்ப்பாடாமெனு மியல்பைச்சுட்டி, " உள்ளப்பட்ட நகை நான் கென்ப " என்று அவற்றினியலும் வகையும் ஒருங்கு விளக்கப் பெறுதலறிக. இதில் ' என்ப ' எனும் வினைக்கு, " உள்ளுறு முணர்வை நுண்ணிதி னுணரும் புலவர் எனும் எழுவாய் இட நோக்கி அவாய் நிலையாற் கொள்ளப்பட்டது. மெய்ப்பாட்டிய விறுதிப் புறநடைப் பொதுச் சூத்திரத்தில், உள்ளுணர்வின் நன்னயப் பொருள்கோள் தெரியின், நுண்ணிதி னுணர்வார்க் கல்லது எண்ணற்கரிதாமெனக் கூறுதலால், அதற்கேற்ப ஈண்டு " மெய்ப்பாட்டியல் கூறுபவர் உள்ளுறுமுணர்வை நுண்ணிதினுணரும் புலவர் " என்றேற்புடை எழுவாய் கொள்ளப்பட்டது. இதில் 'என்று' என்பது பிரிந்து சென் றொன்றும் எண்ணிடைச்சொல்; "என்றும் எனவும் ஒடுவும் தோன்றி ஒன்று வழியுடைய எண்ணினுட் பிரிந்தே" என்பது இடையியற் சூத்திரம்.

## சூத்திரம் 5

இளிவே, இழவே அசைவே வறுமைஎன
விளிவில் கொள்கை அழுகை நான்கே.

கருத்து :—இஃது, அழுகைஎனுமவலவகைநான்கும்அவற்றி னைப் பொதுவியல்பும் உணர்த்துகிறது.

பொருள் :— இளிவு = இழிதகவு; இழவு = இழத்தல்; அசைவு = தள்ளாத் தளர்வு, அஃதாவது கையறவு; வறுமை = மிடி அஃதாவது இல்லாமை; எனவிளிவில் கொள்கை அழுகை நான்கே = என்று, ஒழியாதலமரச்செய்யுமவலம் இந்நால்வகைத் தாம்.

குறிப்பு :—ஈண்டு, இளிவு—பிறரிகழ்விற் பிறக்குமவலம்; எனின், பழி பிறங்கும் பான்மைத் தாம் இளிவரலன்று. அவ் இளிவரலே அடுத்தசூத்திரம் கூறும். ஈண்டு இளிவுக்கு இதுவே பொருளாதல், இங்கு "இழிவே" எனக்கொண்ட பழம் பாடத் தானும் வலியுறும்,

"நம்மொடு நக்கவால் வெள்ளெயிறே" (குறுந் 169.)

"இம் மகனல்லான் பெற்ற மகன்" (கலி 86.)

"பன்மாயக் கள்வன்" (குறள் 1258.)

"தீரத்தறைந்த தலையும் தன் கம்பலும்
காரக்குறைந்து கறைப்பட்டு வந்து நம்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானை" (கலி 65.)

இவை அகத்தில் உளவியாத 'இளிவு' குறிப்பன.

"மக்களே போல்வர் கயவர்" (குறள் 1071.)

"தேவரனையர் கயவர்" (குறள் 1073.)

இவைபோல்வன புறத்தில் இளிவு குறிப்பன.

ஒழிவு தருவன அழுகை விளையாதாகலின் "விளிவில் கொள்கை அழுகை நான்கென" அவற்றின் பொது வியல்பு விளக்கப் பட்டது. ஏகாரங்கள் முன்னைய எண் குறிப்பன; ஈற்றது அசை; தேற்றமெனினும் தவறாகாது. 'என' என்பது பிரிந்து சென்றொன்றும் எண்ணிடைச்சொல்.

சூத்திரம் 6

மூப்பே, பிணியே, வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே

கருத்து :—இஃது, இளிவரல் எனும் மெய்ப்பாட்டு வகை நான்கும் அவற்றின் பொதுவியல்பும் குறிக்கின்றது.

பொருள் :—மூப்பு=முதுமை; பிணி=நோய்; வருத்தம்= இடுக்கண் அல்லது அல்லல்; மென்மையொடு=எளிமை அஃதாவது நொய்மையுடன்; யாப்புறவந்த இளிவரல் நான்கே= தொடர்ந்து படரும் மானக்குறை இந்நான்கு வகைத்தாம்.

குறிப்பு :—மென்மை, இங்கு மிருதுத்துவம் குறியாது இகழ்ச்சிக்காளாக்கும் எண்மை அல்லது நொய்மைப் பொருட் டாம். இளிவரல், மானம் குன்ற வருவது. "இளிவரின் வாழாத மானமுடையார்" எனவும், "இடுக்கண் வரினும் இளிவந்த செய்யார்" எனவும் வருதலான், இளிவரல் இப் பொருட்டாதல் தெளிக. முன் அழுகை வகையுள் ஒன்றாகச் சுட்டப்பட்ட இளிவு அவலிக்கும் அவமதிப்பைக் குறிக்கும்.

அது பழிபடு குற்றமின்றியும் பிறரிகழ்வாற் பிறக்கும் பெற்றியது; எனவே, இளிவு தன்னெஞ்சு சுடுதலின்மையால் வாழ்வில் வெறுப்பு விளையாது. முன் சூத்திரத்திலிதை இளிவென்னுது இழிவென்றே இளம்பூரணர்கொண்ட பாடத்தானும் இவ்வுண்மை வலியுறும். இச்சூத்திரம் சுட்டும் இளிவரல் உயிர்வாழ ஒல்லாமற் குன்றவரும் நிலையிழிவைக் குறிக்கும்.

"தண்ணந் துறைவற்ருெடுத்து நந்நலம்
கொள்வாம் என்றி தோழி! கொள்வாம்
இடுக்கணஞ்சி யிரந்தோர் வேண்டிய
கொடுத்தவைதா என் சொல்லினும்
இன்னாதோ நம் இன்னுயிரிழப்பே" (குறுந் 349.)

"குப்பைக் கோழித்தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோ ரிலையா னுற்ற நோயே" (குறுந் 305.)

"இது மற்றெவனோ தோழி! துனியிடை
இன்னரென்னு மின்னாக் கிளவி?
..........................................
திருமனைப் பல கடம்பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே" (குறுந் 181.)

இன்ன பலவும் அகத்தில் வருத்தம், பிணி, மூப்பு, மென்மை பற்றிய இளிவரல் குறிப்பன.

"தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தா மிரந்துண்ணு மளவை
ஈன்மரோ இவ்வுலகத்தானே" (புறம் 74.)

"தலையினிழிந்த மயிரனையர், மாந்தர்
நிலையினிழிந்தக் கடை" (குறள் 964.)

"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்தவிடத்து" (குறள் 968.)

இன்னபலவும் புறத்தில் இளிவரல் கூறுவன காண்க.

இனி, மூப்புமுதல் மென்மைவரை ஒவ்வொன்றும் தன்னளவில் வாழ்வொல்லாத் தாழ்வுதொடரும் தன்மைத்தாதலின், அப்பொதுவியல்பு விளங்க இவை "யாப்புறவந்த இளிவரல் நான்கு" எனப்பட்டன.

ஏகாரம், முன்னிரண்டும் எண் குறிக்கும்; ஈற்றசைதேற்றமெனினு மிழுக்காது. "மென்மையொடு" என்பதன் 'ஒடு' பிரிந்து சென்றொன்றும் எண்ணிடைச் சொல்.

சூத்திரம் 7

"புதுமை, பெருமை, சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"

கருத்து :—இது மருட்கை எனு மெய்ப்பாட்டுவகை நான்கும் அவற்றின் இயல்பும் உணர்த்துகிறது.

பொருள் :—புதுமை. பெருமை, சிறுமை, ஆக்கமொடு= இந்நான்கனொடும் கூடி; மதிமை சாலா மருட்கை நான்கே= அறிவு சிறவா மயக்க வகை நான்காம்.

குறிப்பு :—புதுமை, முன்னறியா யாணர்த்தன்மை; அஃதாவது நூதனம். பறழுக்கு வயிற்றில் பையையுடைய கங்காரு, பறக்குமீன், சிற்றுயிருற்றக்கால் பற்றிப் பிசைந்துண்ணும் பூச்செடி, இருதலை, முக்கண், ஐங்கால், அறுவிரல் முதலிய வழக்கிறந்த உறுப்பு உடைய உயிர்கள் போல்வன காண எழுவது; புதுமையிற் பிறக்கும் வியப்பாகும்; அது பெரிதும் இயற்கையிற் றோன்று மியல்பிற்றும். ஆக்கம், அறிவுடைமக்கள் சமைக்க அமைவது; எனவே, ஆக்க மருட்கை, செயற்கையிற்றோன்றும் அரும்பொருள் விளக்கும் வியப்பாகும். வானவூர்தி, பேசும் படம் போல்வன ஆக்க மருட்கையாம்.

ஒன்றன் இயல்பு பண்பு விளைவுகளைக் கண்டாங்கே ஆய்ந்தறியக் கூடுமிடத்து மயக்கில்லை. மதியால் மதிக்கப்படா வழிமட்டுமே வியப்புவிளையும். ஆதலின் தேர்ந்து தெளியும் தன் திறனற்று அறிவு சிறவா நிலையில் வருவதே மயக்கமாமென்பது தோன்ற "மதிமை சாலாமருட்கை நான்கே" என அவற்றின் இயல்பும் விளக்கப்பட்டது. ஆக்கமொடு என்பதின் "ஒடு" பிரிந்து மற்றைய ஒவ்வொன்றோடும் சென்று சேரும் எண்ணிடைச் சொல். ஈற்றேகாரம் அசை, தேற்றமுமாம்.

(தொடரும்.)

உ

# பிராட்டிக்கிராவணன் தொட்டபழியுண்டா?

திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்,
வடமொழியாசிரியர், போர்டு உயர்கலாசாலை, பாபநாசம்.

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 6, பக்கம் 241)

இனி, 'சைவ சமய நெறி' என்னும் நூலுள்,

"ஆசாரியன்மனைவி யையடிதீண் டாதருச்சி
வாசார் மலர்தூய் மதித்து."

"அந்தயுகந் தோறுமடி தீண்டியருச் சிக்கைதகு
மிந்தக் கலியுகத் தேயாது."

"ஆசான்மனைவியை மாணக்கர் அடிதீண்டி மலர்தூவிப் பராவுதல், முதல் மூன்று ஊழிகளில் அடுக்குமேனும் இந்தக் கலியூழியில் ஏயாது" என்று கலி தவிரப் பிறஊழிகளில் பெண்டிரை அடியவர் தொடுதல் விலக்கப்பட்டிலதேயெனின், இராவணன் முற்பிறப்பில் அடியானேனும் இப்பிறப்பில் தீவினைகன்றிய தீமகனுதலினாலும், 'பிராட்டிக்கு யான் அடியன்' என்னும் கருத்து அவற்கு இன்மையாலும் தூயவல்லாத தொடையிடங்களில் இவன் பற்றுதல் தானும் கூடாதென்க. இங்ஙனமாகத் தலைமயிர் பற்றுதலாகா தென்பதைக் கூறவும் வேண்டுமோ? வழிபடுவோனுயினும் எவனேயாயினும் கணவனை யொழிந்த பிற ஆடவர் பெண்டிரை எவ்வாற்றானும் தொடுதலே கூடாதென்பதே பிராட்டியின் கருத்தாய்ப் பிறங்குகின்றது. அது, காலின்மைந்தர் இவரைத் தம் முதுகின்மேலேறிவரக் கேட்டக்கால் மறுத்துரைத்த கட்டுரையால் நன்குவிளங்கும். அதுவருமாறு.—

1. "ப$_4$ர்த்ருப$_4$க்திம் புரஸ்க்ருத்ய ராமாத$_3$ன்யஸ்ய வானர ।
நஸ்ப்ருஸாமி ஸரீரம் துசுபும்ஸோ வானர புங்க$_3$வ॥"

2. "யத$_8$ஹம் க$_3$ாத்ர ஸம்ஸ்பர்ஸம் ராவணஸ்ய ப$_3$லாத்$_3$க$_3$தா।
அநீஸா கிம் கரிஷ்யாமி விநாதா$_2$ விவஸா ஸதீ॥"

ஸுந்தா.—ச.37—சு.62,63.

(பொருள்:—) 1. குரங்கருக் கெல்லாம் தலைமைபூணும் குரங்கரே, கற்புடைமை கடனுக்கொண்டு யான் இராமபிரானுடைய திருமேனியைத் தவிரப் பிறஆடவரின் உடம்பைத் தீண்டலுறேன்.

2. "யான் இராவணனது வலுக்கட்டாயத்தால் அவனுடல் தீண்டலைப் பொருந்தினேனெனில், மீட்கும் தலைவரிலாதும், உணர்விழந்தும் என் தலைமை தவிர்ந்த யான் அதுபற்றி என் செயக்கடவேன்."

இவ்வாறு பிற ஆடவர் உடல்தீண்டாக் கொள்கையை வலியுறுத்தல் காண்க.

இனி, பிராட்டியார் கொடிய இராவணனைத் தம் கற்பினுற்றலால் உடன் வசையிட்டு ஏன் எரித்தலாகாதெனெ இயம்புவார்பலருளராலெனின்; நன்று, இராமபிரான் துறவோர் வேண்டுகோளால் இராவணனை வேருடன் கெடுப்பதாகக்கூறிய உறுதிக்கு மாறுக முடியுமாதலாலும், தலைவனிருக்கத் தாமே ஒரு வினையைத் தம்* தலைமையால் முடித்தல் கற்புடை நல்லார்க்குக் கடப்பாடன்று மாதலாலும்,கண்ணகி முதலோர்க்கும் தலைவனையிழந்த பின்னரே தலைமை மேற்கொண்டு வழக்குரைத்தல், மதுரையை எரியூட்டல் முதலிய செயல்கள் புரியத் தகுவனவாயினமையாலும், இன்னோர் மறக் கற்புடைய மகளிராகச் சான்றோரால் சாற்றப்படுதலாலும், தண்ணிய பண்பினையே தகுநற் பூட்கையாகக்கொண்ட அறக்கற்புடைய நம்பிராட்டிக்குக் கையறம் கூறிக் கயவனுகிய இராவணனை எரித்தொழித்தல் கூடாதென்க.

மற்றும், இராவணன் பற்றுங்கால் நம்பிராட்டிக்குச் சினமே தோன்றுதிருந்தது. அது தோன்றினன்றே வசை மொழியும்தோன்றும். அது பற்றியும் எரித்தல் நேர்ந்திலதென்க.

பிராட்டியார் எப்போதும் செந்தண்மையே பூண்டு, தம்பால் தீமையே புரியும் திறமுடைய, காகாசுரன், இலங்கை அரக்கியர் முதலோர் யாவர்க்கும் தண்ணளியே புரியும் வகை கண்டு, தந்தலைவராம் திருமால்பால் ஓம்படுத்தலும் செய்யும் கடப்பாடுமேற்கொண்ட கழிபெருங்கடவுளாதலின் இராவணன் பாலும் ஐயோ! இவன் இத்தீவினையால் கிளைஞரொடும் கெட்டழிவானே எனச்சாம்புதலல்லது வெம்புதல்செய்தலிலார் என்பதை

* தலைமை—சுதந்திரம்.

இராமாயணத்தின் மட்டுமன்றிப் பிற பெரியோர் நூல்களிலும் ஆராய்ந்துரைக்குமவற்றை அறிந்துணர்ந்து கொள்க. நாலடியாரிலும்,

தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றிமற்
றெம்மையிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரயத்துள் வீழ்வர் கொலென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

எனக்கூறியவாற்றால், சான்றோர் பிறர்கேடுநோக்கிக் கலுழ்தலைக் கண்டு கொள்க. இதனைக் காவின்மைந்தரும் கவின்பெற விளக்கல் காண்க

நதத$_3$க்$_3$நி விகா$_2$ குர்யாத் ஸம்ஸ்பிருஷ்டாபாணிநா சதி ।
ஜனகஸ் யாத்மஜா குர்யாத் யத்க்ரோத$_4$ கலுஷீ க்ருதா ॥

சுந்தர.—ச. 59—சு

(பொருள்:—) கையால் தீண்டப்பட்ட அக்கற்புடைச் சீதா பிராட்டியார் சினத்தால் எண்ணம் குழம்பி யாதினைச் செய்யக்கூடுமோ! அதனை எரியின் கொழுஞ்சுடரும் புரியலாற்றாது. (சினந்தால் எரியினும் கொடிது வருத்துவார் என்றபடி) கணவர் வாயிலாகப் பகை முடிக்க நினைந்தாராகலிற் சினந்திலர் என்பது கருத்து.

மேற் கூறிய வற்றைக் கொண்டு பார்க்கும் போது பிராட்டியைத் தொட்டது குற்றம் குற்றமே என்பது சொல்லாமலே விளங்கும். இதன் முடிவாகத்தான் இராவணன் வேருடன் அழிக்கப் பட்டான். பிராட்டியும் தீக்குளிக்க நேர்ந்தது. தீக்குளிக்குமுன் பிராட்டியார் பெருமாளுக்குத் தம்மேல் குற்றமில்லை எனக்கூறும் பொருள் ஆராயத்தகுவதே. அஃது இதுவே.

1. யத்3யஹம் க$_3$ாத்ர ஸம்ஸ்பர்ஸம் க$_3$தாஸ்மிவிவஸா ப்ரபோ$_4$ ।
காமகரோ நமே தத்ர தை3தவம் தத்ராப ராத்$_4$யதி ।

2. மத$_3$தீ$_4$னம் து யத்தன்மே ஹ்ருத$_3$யம் த்வயி வர்ததே ।
பராதீ$_4$னேஷு க$_3$ாத்ரேஷு கிம் கரிஷ்யாம் யனீஸ்வரா ॥

யுத்த—ச.119—சு.8,9.

(பொருள்:-)"1. அரும்பெறற்றலைவ, என்னுணர்வினையிழந்த யான் (பிறன்) உடல்தீண்டலைப் பொருந்தினேனென்றால், இதில் என்விருப்பொடு புரிந்ததாகும் செயல் யாதும்இல்லை. ஆனால், இதில் ஊழ்வினைதான் குற்றவாளியாகின்றது."

2. "என்னடிப்பட்டதாய், யாதொரு எனதுள்ளமுண்டோ அது தங்கள்பாலே நிகழ்ந்துகொண்டிராநின்றது. (தங்களையே ஓயாமல் நினைத்துக்கொண்டிருந்தது.) பிறன்பாற்பட்ட வெற்றுடம்பு பற்றியோ என் தலைமையிழந்த யான் என்செய்யக் கடவேன்."

"நான் இராவணனாற் பற்றப்படும் போது திகைத்துப் போய் உணர்விழந்தேன். உணர்வுவந்தபோதும் யான் தங்களையே ஓயாமல் நினைத்துக் கொண்டிருந்தேன். உறுப்புக்களுள் முதன்மை வாய்ந்த என்நெஞ்சம் தங்கள் பாலே இருந்தது. வெற்றுடலம் மட்டுமே அவ்வரக்கன் பாலிருந்தது. வலியிலி நங்கையாகிய நான் அவனை என் செயக்கூடும்? தங்கள்பாற் செலுத்திய உள்ளமுடைமையால் எனக்குத் தீண்டியதால் வரும் குற்றமேயில்லை. தீண்டுதல் நிகழ்ந்தமைதானும் என் கற்பின் குறைபாட்டாலன்று. மற்று, அஃதுஊழ்வினையின் குற்றமே யாகும். ஆதலால், எளியேனை ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்பதுதான் இதன் கருத்துப்பொருள். முன்னரும், வான்மீகியாரால்,

க்ரோஸந்தீம் ராமராமேதி ராமேண ரஹிதாம் வனே ।

என்பதுமுதலாக இராமபிரானைக் குறித்தே 'இராம, இராம' என்று கூக்குரலிட்டுக் கொண்டேயிருந்தார் என்பது கூறப் பட்டது.

எல்லாத் தீவினைகளையும் பறக்க அடித்து வீட்டு நெறிக்கட் செலுத்தும் 'இராம' என்னும் ஈரெழுத்து மறை மொழியதனை யடிக்கடி கூறிவந்ததாலேயே பிராட்டிக்குத் தொட்டகுற்றம் ஒட்டாமல் ஓட்டமாய் ஓடியிருக்கவேண்டும். எனினும், உலகோருக்குப் பிராட்டியின் தூய்மையை விளக்கிக்காட்ட வேண்டியே தீயிடைப்புக உடன்பட்டார் அப்பெருமான். இந்த 'இராம' என்னும் திருப்பெயரை ஒலித்தொலித்தே கணக்கற்ற பேர் தம் தீவினைப் பிணக்கறுத்தனர். அகலியை என்பாளும் தான் கற்பிழந்ததால் எய்திய தீவினையை இவர் திருப்பெயரை ஓயாதோதியே நீக்கிக்கொண்டாள் என்பதும், மீண்டும்கற்புடை யாளாகக் கொள்ளப்பட்டு ஐங்கன்னியருள் ஒருத்தியாக வைத் தோதப்பட்டாளென்பதும் உணர்ந்து கொள்ளலாகும். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க் கழுவானேன். நமது வான்மீகியார் செய்தி எப்படி? அவரும் 'ராம' என்னும் இவ் வீரெழுத்தின் பெருமையால் தானே தூற்றத்தகும் வேட்டுவ

நிலையிலிருந்து துறவராகும் இவ்வுயரிய நிலைமை எய்தினர்! அங்ஙனமாக, அத்திருப்பெயர் நம்பிராட்டியின் குற்றத்தை மட்டும் நீக்கமாட்டாதாகுமா? எனினும், முடிச்சின்மேல் முடிச்சிட்டால் கட்டியகட்டு இன்னும் வலுவுபெறுதல் போலத் தீயில் இறங்கலாலேயும் இருமடங்கு தம் தூய்மையைப் பிராட்டியார் வெளியிட்டுக் காட்டியவராவார்.

மனுநூலில், மகளிர் பிற ஆடவர்களைக் காதலொடு நினைக்கினும் நோக்கினும்கூட அவர்தம் அக்குற்றம் திங்கள்தொறும் நேரும் பூப்பினால் போய்விடுகிறது என்று கூறப்பட்டுள்ளதை நீங்கள் கேட்கின் என்ன சொல்லுவீர்களோ! மனு கூறுவது இதுதான்.

மருத்தோயைஸ்ஸு$_3$த்$_4$யதே ஸோத்$_4$யம் நதீ$_3$வேகே$_3$னஸு$_3$த்$_4$யதி।
ரஜஸா ஸ்த்ரீ மனோது$_3$ஷ்டா ஸந்யாஸேன த்$_3$விஜோத்தமா:।
மனுமிருதி, அத்தியாயம் 5—சு. 108

(பொருள்):—தூய்மை செய்யத்தகும் பொருளெலாம் மண்ணாலும் நீராலும் தூய்மை செய்யப்படும். யாறு தன் ஓட்டத்தால் தூயதாகிறது. தன் உள்ளத்தாற்கெட்ட பெண்பால் திங்கள்தோறும் எய்தும் பூப்பினால் தூயவளாகிறாள். உயரந்தணர் துறவறத்தால் தூய்மையடைகின்றனர் என்பது.

இங்கு, 'உளத்தாற்கெட்ட பெண்பால்' என்பதற்குக் குல்லூகபட்டர் 'பிற ஆடவர்பால் புணர்ச்சி எண்ணம் கொள்ளல் முதலிய கெட்டவுள்ளமுடைய பெண்பால்' எனவே பொருளுரைக்கின்றார். பெண்களுக்கு இவ்வளவு எளிதாகக் குற்றங்கள் நீங்கும்படியாயிருக்கும்போது, தம் திருவுளத்தால் மறந்தேயும் இராவணனை விருப்புடன் நினையாத பிராட்டிக்குக் குற்றம் இருக்குமா? இருக்காதா? என்பதை நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லையே!

இன்னும், பாரதத்துள், குந்தியானவள் விண்ணவர் வாயிலாக இம்மண்ணிலத்தில் குழந்தைகளைப் பெறநினைந்து அன்னவர்பால் புணர்ச்சி நிகழுங்கால், தன்காதற் கொழுநன் பாண்டுவின் நினைப்பாகவேயிருந்தாளாதலால், அவளுக்கு அப்புணர்ந்தகுற்றம் இல்லாதாகியதோடு கற்புக்கெடாதாளெனவும் கருதப்பட்டாள் என்று கூறப்படுவதை நோக்கும்போது, பிராட்டியைப் பற்றிக் குறைகூற நாம் வாய்திறக்கவும் கூடுமோ?

இராமபிரானுக்கு இவையாவுந் தெரிந்திருப்பினும், பிராட்டியும் "என்னோடு இத்துணைநாள் பழகியும் என் நற்பண்பினைத்தாங்கள் உணரவில்லையென்றால், நான் அழிந்தே போனேன்" எனக்கரடியாகக் கத்திக் கூறினும், தீக்குளித்தெழுந்து தம்பாற் குற்றமின்மையை நேராக உலகோர்க்குக் காட்டாதவரையில் அப்பெருமான் திருவுள்ளம் பிராட்டியை ஏற்றுக்கொள்ள ஒப்பவேயில்லை. இராவணன் தொட்டதும் பிராட்டியார் தம் தலைமைகொண்டு அவனைத் தமயந்திபோல் எரித்துவிடிலோ கணவர் துறவோர்க்குக் கூறிய சொல்லுறுதி கெட்டழியும், ஒன்றும் செய்யாவிடினோ இராமபிரானிவரைத் தம்மனைக்கிழத்தியாராக ஏற்றுக்கொள்வதாயில்லை. தீயும்புக வேண்டியதாயிற்று. இந்நிலையில் பிராட்டியின் நிலை இருதலைக் கொள்ளி எறும்புபோல் எவ்வளவு இரங்கத்தக்க நிலையிலிருந்ததென்பது கற்றோரனைவராலும் கருதி வருந்தத்தக்கதொன்றும். மண், நீர், எரி, கால் எனும் இந்நாற் பொருளும் ஒருவர் உடலைத் தூய்மைசெய்வதற்கு அமைவனவாம். இவற்றுள் எரியே ஏனைய மூன்றினும் சிறந்ததாகலின் அதனையே தூய்மை செய்தற்கு முடிவான பொருளாகக் கொள்கின்றனர் பெரியோர். இது பற்றியே பிராட்டியாரும் அத்தூய்மை பெற வேண்டிற்று.

பிராட்டியார் தீக்குளித்ததும் எரிக்கடவுள் எழுந்துவந்து, என்னையும் சுடும் கற்புடையாரிவர் எனக் கூறி இராமர்பால் ஒப்படைத்தார். மற்றும் முக்கண்ணர், எண்கண்ணர் முதலிய விண்ணவரும் வந்து ஐயுறல் தீது என்று அறிவுறுத்தினர். தசரதரும் வந்து பாராட்டிக் கூறினர். இவ்வளவும் நேர்ந்த பின்தான் பெருமாள் பிராட்டியை ஏற்றுக் கொள்ளலானார். ஏற்றுக் கொண்டுமென்? பின், அயோத்தி நாட்டின் மக்கள் அம்பல் எடுப்ப அது அலரா முன்னமே மலருறைவாளை இலக்குவரால் மலங்குகானிடை விலக்கியருளினர். இராமபிரான் மன்னவர் என்னும் முறையில் முறை செய்வதற்காகவே இங்ஙனம் செய்வதானர். வேந்தன் குடிகள்பால் ஒழுகும் முறைபற்றி வடமொழிப் பெரும்புலவர் காளிதாசர் கூறும் கருத்து இதற்கொத்ததே. அவர் 'ராஜா' என்னும்சொல்லுக்கு 'ரஞ்ஜனாத் ராஜா' என விளக்கங்காட்டுவர். குடி படைகளைக் களிப்பிப்பான் எவனோ அவனே அப்பெயர்க் குரியவனாவான் என்பது அத்தொடரின் பொருள். இராமபிரானும் குடிகளைக் களிப்பித்தற்காகவே பிராட்டியை மறுமுறை காட்டிற்கனுப்பினர் என்பர்.

இவ்வளவு துன்பமும் கணவரால் தமக்கு நேர்ந்தும் பிராட்டியார் அவர்மேல் மறந்தேயும் குற்றம் கூறிற்றிலர். பின், தாம் செய்த தீவினை தான் நல்லவராம் நம் பெருமாளையும் நடுங்குந்துயரம் நல்கச்செய்தது என்று தம்மையே நொந்து கொண்டிருப்பர்.

பெருமாள்பால் பேராத அன்புடைய அடியவரெல்லாம் இப்பிராட்டியார் செயலையே எடுத்துக் காட்டாகக் கொண்டு, நந்துயருக்கு நம் தீவினையல்லது பெருமாள் முதலாகார் என்ற கருத்துக்கொண்டு, அடங்கி ஒழுகவேண்டுமென்று கூறுவர் ஆன்றோர்.

இனி, இராவணன் பிராட்டியைத் தொட்டுத் தூக்கிப் போனதை மட்டும் ஒப்புக்கொண்டு, அவர் தீக்குளித்ததை ஒவ்வாத மாந்தர் பவபூதி என்னும் பாவலர் நாளிலும் இருந்தாராகத் தெரிகின்றது. அவரால் இயற்றப் பட்ட 'உத்தர ராம சரிதம்' என்னும் கூத்தியல் நூலுள், இத்தகைய மாந்தர் வெறுத்துக் கூறப்பட்டுளர். என்னவெனில், "யான் இந்நூலுக்கு அவையடக்கமே கூற மாட்டேன். இவ்வுலகம் அறிவற்றது; தன் வழிப் போக்கினது. எடுத்துக்காட்டாக, இராவணன் சீதாபிராட்டியாரை எடுத்துப்போனான் என்றால் ஆம்! ஆம்!! என ஒப்புக்கொள்கின்றது. அவர் தீக்குளித்துத் தம்கற்பினை மெய்ப்பித்தார் என்று அதே வான்மீகியார் கூறியும் அதனைமட்டும் ஒப்ப மாட்டேன் என்கின்றது. இவ்வாறான அறிவற்ற நிலையில் உள்ளாரை அடக்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகை ஒரு பொருளாக எண்ணி யான் அவையடக்கம் கூற வேண்டியதில்லை" என்று பாடியிருக்கின்றார். இந்நாளிலும் அத்தகையார் மிகுந்திருப்பது கண்கூடன்றோ?

(தொடரும்)

௯

# வள்ளல் கண்டீரக்கோப் பெருநள்ளி

(ஒரு சிறு நாடகம்)

சிவ. குப்புசாமி

தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 6, பக்கம் 234.)

## இயல்-க—காட்சி-உ

**உறுப்பினர் :—** நங்கை-பொன்மொழி, தோழி-தேமொழி, காவலன்.

**இடம் :—** மறவர் நெடுந்தெருவில் ஓர் இல்லம்.

**காலம் :—** பிற்பகல்.

[முதல்நாட் போரில் மடிந்த தன் ஐயின் பொருட்டு வாடிநின்ற "வீரமாநங்கை-பொன்மொழித்தேவி" கணவன் போரில் மாண்ட செய்தி கேட்டுப் புலம்பல்.]

**தோழி-தேமொழி :—** நங்காய்! நீ மிக்க முகவாட்டமுற்றிருப்பதைக் காண, எனக்கு வருத்தமாயுளது. நீ அறியாதனவற்றை நான் உனக்குக் கூறப்போவதில்லை. நீ ஏனோ இவ்வாறு கவலை கொள்கின்றாய்? மண்ணிற் பிறந்தார் எவரும் ஒருநாள் திண்ணமாகச் சாவரல்லவோ? ஆண்டாண்டுதோறும் அழுது புலம்பினால் மாண்டார் எவரும் வருவரோ? நின்னையொத்த வீரத் தமிழ்க்குடி நங்கை, போரில் இறந்த ஒருவற்காக உளம் நைதல் அழகாமா?

**நங்கை :—** தோழீஇ! கழிந்தன கருதி நான் கவலுறுதல் இல்லை; எனினும் இதுபோது என்னால் அடக்கமுடியாதவாறு என் உள்ளம் துக்கத்தால் நிறைகின்றது. எவ்வளவுதான் நினைவு கூர்ந்தாலும் தாய் தந்தையர் முகத்தை அறியமுடியாத படியுள்ள அத்துணைச் சிறுபருவத்திலேயே, நான் என் அருமை அன்னையையும் தந்தையையும் விழுங்கினேன். அந்த நாள்

தொட்டு நெருநல் வரையும் எனது வாழ்வே தனது வாணாளின் குறிக்கோளாகக்கொண்டு மகிழ்ந்தவரன்றோ என் அருமைத் தமையன். எச்சிறுதுயர் எனக்குவரினும் அல்லும்பகலும் எனக் கருகிலிருந்து, சீராட்டிப் பாராட்டி, தாயினும் மிக்க அன்புடன் புரந்தனரே! எனக்கு இத்தகைய தமையன் இனிக்கிடைப்பரோ? அந்தோ! என் அருமைத் தன்னையை எப்பிறப்பில் இனிக் காண்பேன்!

**தோழி :—**தேவி! உன் தன்னை உன்னிடங்கொண்ட அன்பின் சிறப்பே, இதுபோது உனக்குப் பெருந்துக்கம் தருகின்றது. இனி அதைப்பற்றிச் சிறிதும் உளம்கொள்ளாதே. நம்வேந்தர் பெருமானின் முதற் படையின் முன்னணியில் நின்று, மாநிலம் புரக்க மாபோர் புரிந்த நின் தமையன், இதுபோது, மிகுந்த சிறப்புக்களோடு விண்ணவர் நங்கை விரும்பி வணங்க, வீரர் பொன்னாட்டில் வீறுடன் விளங்குகின்றார். அவர் பெற்றுள இன்பம், இத்துன்பம் மலிந்த மாநிலத்தில் என்றும் கிட்டுதற் கரிது. ஆதலால் நின் தன்னையின் பிரிவை மறந்து, கவலையின்றி அவர் பெற்றிருக்கும் வீரப்பெருந் தகுதிக்கு மகிழ்க.

**நங்கை :—(பெருமூச்செறிந்து)** மறக்கவே முயல்கின்றேன்; என் நெஞ்சமே துயர் தருகின்றது. அமைதியையே விரும்புகின்றேன்; ஆயினும் ஏதேதோ பலப்பல எண்ணங்கள் தோன்றுகின்றனவே. உள்ளங்கொள்ளாத அச்சமும், உன்ன வியலாத தீ நிமித்தங்களும் என்பால் உறுகின்றனவே, தோழீ இ! எனக்கு இன்னும் என்ன விளைவு வருமோ? அறியேனே?

**தோழி:-**அம்மே! இதுகாறும் துக்கம்இன்னதெனஅறியாது வளர்ந்த உனக்கு, தாயினும் சாலப்பரிந்து, நின்னைப்போற்றி வளர்த்த நின் அன்புமிக்க அண்ணனின் பிரிவே இவ்வாறு துயர் மிகத் தருகின்றது. ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். உன் தன்னை முதியவர். மேலும் என்றைக்காயினும் இறப்பதற்கும் உரியவர். அவர் இன்று கிடைத்தற்கரிய வீரர் பொன்னாடு சேர்ந்தமை கருதி நீ மகிழ்ச்சியுற வேண்டாவோ? மன அமைதி கொள்க. அதோ! பார்! நம் காவலன் மிக விரைந்து வருகின்றான். என்ன செய்தியோ? கண் கலங்காதே. அமைதியாக இருந்து அவனைக்கேட்டுஅறிகுவம், **(காவலன் அணுகிப்பணிதல்).**

**காவலன் :—(நாநடுங்க)** அன்னாய்! தங்கள் தன்னை.......நெருநல் போர்முனையிலிருந்து.......விண்ணாடு சென்றவர்.......இன்று

........இன்று வந்து............வந்து அழைத்தார்........அழைத்தார் ........அழைத்தார்.

நங்கை-பொன்மொழி :—எடா! காவல, செய்தியைக் கூறுது 'அழைத்தார் : அழைத்தார்' என்று அடுக்கிஞல் என்னடா விளங்கும்? இறந்தவர் எப்படியடா அழைப்பார்.?

காவலன் :—ஐயோ! நான் என்சொல்வேன். அவர் அழைக்க நம் ஐயாவும் (துக்கத்துடன் கூறல்) சென்றனர்.

நங்கை-பொன்மொழி :—ஆ அ அ அ! (உயிர்ப்பின்றிச் சாய, தோழி துயருடன் பணிசெய,) ஐயோ! கடவுளே! இனி நான் என் செய்வேன்? ஏ! காதல! எனக்குத் துணையாவார் இவ் வுலகில் இனி யாருளர்? பெற்றும், உற்றும், பெருந்திருவும், பேரின்பமுமாய நீ, என்னை இவ்வாறு ஏங்கவிட்டுத் தனியே செல்லுதல் தகுதியோ? நீ கொண்ட வீரவாழ்வு இதுதானு? ஏ! தீவினைத்தெய்வமே! உனக்குக் கண்கள் இல்லையா? உணர்ச்சி கெட்டதோ? நேற்றுத்தானே, என் அருமைமிக்க அண்ணனின் உயிரைப் பற்றினுய். அத்துக்கம் ஓர் எள்ளளவு நீங்குமுன், அந்தோ! என் ஊழ்வலியே! என் பெறுதற்கரிய உணர்வினை, எனது உயிரினை இவ்வாறு கொள்ளை கொள்ளலாமா? ஆவியற்ற இவ்வுடல் இவ்வுலகில் எதற்குளது? என் தலைவா! என் கணவா! ஆ! இனி என் செய்வேன்? ஐயோ........

அன்னையின் பரிவோடு அங்காளிங் நாள்வரையில்
பொன்போல் புரந்துவந்தாய், தன்னுய்-தன்னுய்-என்தன்னுய்
தன்னை பிரியுமுன்னர் தன்நேரிலா எனுது
பொன்னுவி கொண்டதே, தெய்வம்-தெய்வம்-அத்தெய்வம்
உன்னையே பொருளாக உயிர்வாழ் வறிந்திருந்தும்
என்னைப்பிரிய வுளங், கொண்டீர்-கொண்டீர்-என்கொண்டீர்
அன்றே என்கைப்பற்றி அனல்நீ முன் கொண்டமொழி
இன்றுநீ தவிர்வது, நன்றே-நன்றே-இதுநன்றே

ஏ! நாயக! நீயும் நானும் ஒத்தநலனும், குணமும், பிறவும் வாய்க் கப்பெற்றவர்கள் அல்லமோ? என்னிடம் எதுவும் கூறுது இவ் வாறு நீ சென்றுல் நான் எங்குறுவேன்? என்நிலைமையை எவர்க் குரைப்பேன்? ஏ! தலைவா! என்னை இங்கு இருக்கவிட்டு, நீ, தனியே. நான் வாராத ஊருக்கு வழி கொள்ளுதல் முறை யாமோ? நீயும் நானும் உளம்பொருந்திய காதலமைந்த அற வாழ்விலீடுபடவில்லையா? என்றேனும் எனுதுசெயல் நின் கருத்துக்கு மாறுயதோ? யான் எச்சிறு தவறுஞ் செய்தாகக்

கூட நினைவிலில்லையே. என் காதல! அன்றொருநாள் என்னுடன் மகிழ்ந்திருந்தபோது, 'நின் கருத்துக்கேற்ப வொழுகு மியல்பினள் நின் துணைவி, என என் நண்பர்கள் புகழுகின்றனர்' என்று விம்மிதமுற நீ மொழிந்த சொற்களைக்கூடவா இன்று மறந்து ஏகினாய்? நன்று நின்செய்கை.

அறமே தவிர்ந்து முறைகேடுபெற்று அழியாட்சி கொண்ட மன்னன்
மறவேல் நெடுங்கை மல்லார்ந்த தோளின் மறவாண்மை யுற்றாய் நீயோ
திறலே மிகுந்த வீறலோய்நீ பெற்ற சிறுவன்றான் நாளும் நின்னை
'மறவேன் யான்' என்றால் மகனுக்கென் சொல்வன்மறவா! நின் செல்கை யழகோ?

என்தலைவா! எனக்கினி இம் மண்மீது என்னுளது? யானும் இன்னே நின்னிடம் வருகின்றேன். என் நாயக! என்னை மறுக்காமற் போற்றியழைத்துக்கொள்க. இந்நிலவாழ்வு மிகக் கொடிது. ஆஅ! தெய்வமே! இதுவோ உன்நீதி (சோர்ந்துசாய்தல்.)

காட்சி முடிவு.

## இயல்-௪—காட்சி-௩

உறுப்பினர்:—ஆதிரை, வளவன், இளமதிவாணன்.

இடம்:—மறவர்நெடுந்தெரு.

பொழுது:—காலைப்போது.

[வீரமா-நங்கையின் மகன், தன் நண்பன் வளவனுக்குப் போர் மறம் புகட்டல்.]

ஆதிரை:—(வாடிநிற்கும்வளவனிடம்) ஏடா! வளவ, என் நினதுமுகம் வாடிஇருக்கிறது? உன் உடம்புக்கு ஏதேனும் ஊறுபாடு வந்ததோ? அவ்வாறாயின், என் அன்னையிடம் கூறிஅதற்கு வேண்டுவன புரிவேன், விரைவிற்சொல்க.

வளவன்:—அக்கா! என் உடம்புக்கு எக்கேடும்இல்லை. நான் வளமாகத்தான் இருக்கின்றேன்.

**ஆதிரை:**—பின்னர் ஏன் வாட்டங் கொண்டுள்ளாய்? ஏதேனும் குறும்புகள் செய்து நின் தந்தையால் நையப் புடைக் கப்பட்டாயோ?

**வளவன் :**—அவ்வாறுமில்லை, போ. நான் ஏன் குறும்புசெய் கிறேன்.

**ஆதிரை :**—அஃதின்றெனில், ஏனோ இவ்வாறு அழுமுகங் கொண்டுள்ளாய்?

**வளவன் :**—நான் என் சொல்வேன் அக்கா! என் தந்தை, இன்று விடிவதற்கு முன்னேயே போர்க்களஞ்சென்றார். நேற் றிரவு அவர் போருக்கு ஆயத்தமாகும்போது போர் நிகழ்ச்சி எவ்வாறிருக்கும் என்றேன். அதற்குஅவர்கூறிய மறுமொழியே என்னைமிகவும்அச்சுறுத்துகின்றது. ஆயிரம் ஆயிரமாகயானைகள் நிற்குமாம். மிகுந்த பரபரப்புள்ள பதினாயிரக் கணக்கில் குதிரைகளிருக்குமாம். உயர்ந்த தேர்களும் நூற்றுக்கணக் கில் தோன்றுமாம். நூறாயிரக்கணக்கில் வீரர்கள் வரிசை வரிசையாக ஆரவாரஞ்செய்து இருப்பார்களாம். எங்கு பார்த் தாலும் வில்லும் அம்பும் வேலும் வாளும் ஒளிவீசுமாம்.

**ஆதிரை :**—(புன்னகையுடன்) நல்லபிள்ளைநீ! இதற்காகவா, அஞ்சி வாடினாய்? இவற்றைக் காண எவ்வளவு அழகாயிருக்கும் தெரியுமா?

**வளவன் :**—இதற்காகவா அஞ்சினேன்? நன்று சொன்னாய் இவ்வாறு கூடியுள்ள தேர், யானை, குதிரை, வீரர் முதலிய படைகள் யாவும் மிக்க சினத்தோடும் சீற்றத்தோடும் போர் புரியத் தொடங்குமாம். எங்கும், 'வெட்டு.'' குத்து' 'அறு' 'தள்ளு'என்ற கூச்சலே நிரம்புமாம். தரைமீதுள்ள புழுதி,புகை போலப் பொடிபட்டு வானமெல்லாம் பறக்குமாம். யாருக்கு, எப்பொழுது, என்னவருமோ வென்று கூடத்தெரியாதாம், இன்னும், குருதி வெள்ளம் வாய்க்காலில் நீர் ஓடுவது போல யானை,குதிரை, மக்கள் இவர்கள்உடலிலிருந்துபீறிட்டுப்பாயுமாம். அப்போது போரில் வெட்டுண்டும் தலைபோயும் குடல்சரிந்தும் கண்டவர்நடுங்க, வீறிட்டுஅழுது மடிபவர்களின் ஒலி, கேட்பவர் நெஞ்சைத் திடுக்கிடச்செய்யுமாம். அத்தகைய போருக்கு என் தந்தை, 'நாளைபோவேன்' என்றதும் என்நெஞ்சம் நிறைந்தது, அக்கா! ஆழ்ந்த கவலையுள்.

**ஆதிரை :**—(பெருமிதத்துடன்) அடா, நடுக்கங் கொள்வாய்! ஒருக்கால் உன் தந்தை அப்போரில் செத்துமடிந்தால் என்- செய்வது என்றுதானே வருந்துகின்றாய்? நன்று நின் ஆண்மை:

நீயும் ஓர் ஆண்மகனே? அதோபார், நம் இளமதிவாணனும் வருகின்றான். அவன் எவ்வளவு வீறுடன் நடக்கின்றான் என்பதை நோக்குவாய். அவனுடைய மாமன் மிக்கவலிமை யுடையவர்: திறமையும் பெற்றவர். அவர் முதல்நாட்போரில் மாண்டுபோனார். இன்றும் அவன்தந்தை போர்முனையில் இருந்து சமர்புரிகின்றார். ஏதேனும் தினையளவாயினும் வாட்டம் அவனது மலர் முகத்தில் உள்ளதா? பார்.

இளமதி:—(இருவரையும் அணுகி) ஆதிரை! வளவன்பால் என்னைப்பற்றி என்ன கூறுகின்றாய்?

ஆதிரை:—இவனது முகத்தைப்பார். இவன் தந்தை இன்றுதான் போர்க்களஞ் செல்கின்றார். இதற்குள்ளாக இவன் இவ்வாறு வருத்தமடைந்துளான்.

இளமதி:—எடா! வளவ, ஆதிரை கூறியது உண்மைதான் போலும். அட! மதியிலி. நம் ஆதிரைகூட நெருநல் அவள் தந்தையுடன் போர்க்களஞ்சென்று தொண்டுபுரிய விரும்ப வில்லையா? ஒரு சிறுபெண்: நாட்டின் நன்மைக்காகப் போர்க் களம் போகத் துணியும்போது நீ, ஓர் ஆண்மகன்: மறவர்க்குடி யினன்: உன் தந்தை போருக்குச் சென்றமைக்கு வருந்தினால், சீ, நீ, என்ன பையல்...மிக்க அச்சங்கொள்ளி. (தன் கையி லிருந்த வில்லையும் அம்பையும் நீட்டி) அடா, இவற்றைப்பிடி. ஒன்றுக்கும் பற்றாதவர்களும் பிறர்உழைப்பால், இங்குவாழ்பவர் களும் தன்னலமே பேணுபவர்களுங்கூட, இந்நாளில் வாயளவில் வீரம் பேசுகின்றார்கள். உண்மை மறவர் மரபில்தோன்றிய உனக்கு இவ்வாறு அச்சம்தோன்றலாமோ? வளவ! நீ, என் னோடு நான் கூறுவதைச் சொல்லவேண்டும். இதோ கேள்.,

இளமதி:—எடுத்தேன் வில்லை. வளவ:—எடுத்தேன் வில்லை
தொடுத்தேன் நல் நாண் தொடுத்தேன் நல் நாண்
குறித்தேன் அம்பால் குறித்தேன் அம்பால்
துணித்தேன் குறி துணித்தேன் குறி.

[மறுபடியும் கூறுதல்: மறுபடியும் விரைவிற் கூறுதல்]

நன்று வளவ! இன்றோடு நீ அச்சத்தைமறந்துவிடு. ஆடவனாகத் தோன்றிய எவனும் அறமுறை கெடாதவாறுள்ள ஆட்சியைக் காக்கக் கடவன். இன்றைக் கிருப்பார் நாளைக்கில்லை. நம் உடம்பு உள்ளபோதே அதனை நாட்டின் பொருட்டுச்செலவு செய்தால் புகழும் பேரின்பமும் கிடைக்கும். மற்றும் போரில் மாண்டவர் பொன்னுலகன்றோ ஆளுபவராவர். பொன்னாடு

சேர்ந்தால் எந்நாளும் இன்பம் பெறலாம். யான்கூட என் அருமை அன்னையின் ஆணைபெற்று நாளையே போர்முனைசென்று என்னால் இயன்ற தொண்டு செய்யப் போகின்றேன். 'எறும் பூரக் கல்லும் குழியும்' அன்றோ? 'ஒரு சிறு துரும்பும் கலம்நீர் தேக்கும்' என்பது நம் ஆன்றோர் பொன்மொழியல்லவா? ஆதலால் வளவ, நீ நமது நாட்டின் நன்மையைநாடும்போது அதற்கு மாறான எதற்கும் அஞ்சுதல் ஒழிக.

வளவன் :--இளமதி! நன்று, யானும் போர்க்களம் வர முயலுகிறேன். ஆனால் ஒன்று. என் தாய் என்னை அனுப்ப மாட்டாரே. இருப்பினும் இன்றுமுதல் என்னைப்பற்றி நின்ற போரைக் குறித்த அச்சம், உன் நன்மொழியால் என்னைவிட்டு நீங்கியது. இனிமேல் போர்குறித்த அச்சமே எனதுளத்தில் திண்ணமாக ஏற்படாது.

ஆதிரை :— இஃதன்றோ நல்லசெய்தி. வளவன் இப்போது தான் ஓர் ஆண்மகன், வீரமரபினன், பழந்தமிழ்க் குடியினன் ஆயினான். வாழ்க இளமதி. நின் போன்ற இளைஞர்களே நம் நாட்டின்புகழ் ஓங்குதற்குற்ற தூண்களாவார்கள். 'கொண்டதே கோலம், கண்டதே காட்சி' எனத்திரியும் அறிவிலிகள் பலர் நாட்டைக்கெடுப்பதோடல்லாமல் வீரவுணர்ச்சியின்றி அடிமைத் தளை பூண்டு, தன்னலம் பேணித்தறிதலைகளாய் வாழுகின்றனர். அவர் எத்துணைப் பெரிய தகுதி வரப் பெற்றிருப் பினும், அம்மம்ம! அவர்களால் ஒருநன்றியைத் தினைத்துணையும் இந்நாடு பெறாது; இஃதுண்மை. என் அருமைத் தோழர்களே! நீங்கள் மிக்க ஊக்கத்தோடு நம் நாடு மேலோங்கிச் செழிக்கப் பாடு படுவீர்களாக. பெண்களாகிய யாமும் இயன்றவாறெல்லாம் நாட்டின் பொதுத் தொண்டுள் உங்கட்கு இனித் துணையாவோம் காண்பீர்.

இளமதி :— ஆதிரை! உன் வாழ்த்துப்படியே யாங்களும் சிறப்புறுவோம். சென்று வருவோம் (செல்லுகின்றனர்)

(காட்சி ரு முடிவு)

## இயல்-உ—காட்சி க

உறுப்பினர் :— இளமதிவாணன், தோழி-தேமொழி, தேவி-பொன்மொழி.

இடம் :—மறவர் நெடுந்தெருவிலோர் இல்லம்.

காலம் :—முற்பகல்.

[வீரமா-நங்கை, தன் ஒரே மகன் இளமதிவாணனைப் போர்க்களம் அனுப்புதல்.]

இளமதிவாணன் :—

(க) நீலமயின் மீதுறைவான், நீறணிமாதேவன் மகன்,
பாலமுதவாய்க் குழந்தை, பள்ளிகொண்ட மான்மருகன்,
கோலவள்ளி தோளணைவான் கொஞ்சுதேவானை கொழுநன்,
சூல்மலிமா முகில்வரைசூழ், சுடர்மணிவேல் தமிழ்முருகன்

(உ) எங்கள்குல நற்கொழுந்து, எழுசுடர்த் தீவண்ணன்மகன்,
எங்களுளத் தூயமணி, எழில்உறு கோயிலினுறைவான்,
திங்கள்குடை செங்கோல்நள்ளி, சேவைகொண்டு நனிமகிழ்வான்,
எங்குநிறை இன்பப்பொருள், என்றென்றும் வாழியவே.

அம்மா! அம்மா!! நீ, ஏன் என்னோடு பேசவில்லை? ஒரு குறும்பும் நான் செய்யவில்லையே. நான் பாடினால் நீ எப்பொழுதும் மகிழ்வாய்: கொஞ்சிப் பேசுவாய்: என்னைக்கட்டியணைத்து முத்தம் தருவாய். ஆனால் நீ இன்று என்னவோ வருத்தமாக இருக்கிறாய். ஏன் அம்மா! என் அப்பாவும் நின் அண்ணாவும் நேற்றும் அதன்முதல்நாளும் போர்புரியப் போனவர்கள் வரவில்லையென்று இப்படிக் கவலையோடிருக்கிறாய்? (தோழியை நோக்கி) ஏடி சித்தி, ஏன் இன்னும் அவர்கள் வரவில்லையென உனக்குத் தெரியுமோ?

தோழி-தேமொழி :—என் கண்ணே! எனக்குத் தெரியும்: நான் சொல்லுவேன். இங்கு வா (முதுகைநீவி) உன் தந்தையும் உன் அன்னையின் தன்னையும் போர்க்களத்துக்குப் போனார்களா?

இளமதிவாணன் :—நேற்றும் அதன் முதனாளுஞ் சென்றார்கள்: நன்று: பின்னர்.

தோழி-தேமொழி:—அங்கிருந்தே எங்கேயோ ஓர் ஊருக்கு, ஒரு பெரிய ஊருக்கு அரசர் பணியோடு புறப்பட்டார்களாம். திரும்பிவர, பலநாட்களாகுமாம்.

இளமதிவாணன் :—இருக்கட்டுமே: அதனால் என்?

தோழி-தேமொழி :—போகும்போது உன் அன்னையிடம் வந்து சொல்லிக் கொள்ளாமற்கூடப் போனார்கள். அதனால் தான் நம்தேவியார் வருந்துகிறார்கள்.

இளமதிவாணன் :—அட! இதற்காகவா? நன்று, நன்று. (அன்னையை அணுகி) அம்மா! நான் கூடத்தான் போர்செய்ய மிகவும்விரும்புகிறேன். எனக்கு மூன்றுநாட்களாக வில்லாசிரியர் வகுப்பில் முதலிடம் கிடைக்கின்றது. என்னோடு விற்பயிற்சி பெறும் மாணவர்களைவிட நான் சிறந்தவன் என்றும், மற்றும் போர்க்களஞ்செல்லும் திறமையும் எனக்குண்டு எனவும் ஆசிரியர் கூறினார். அம்மா! அம்மா!! இதோ பார் (அன்னையின் முகவாய்க் கட்டையைப் பற்றிக்கொண்டு) எனக்கு நன்றாகப்போர் செய்யத் தெரியுமே. என்னைப்பார் அம்மா!

“எடுத்தேன் வில்லை—தொடுத்தேன் நல்நாண்
விடுத்தேன் அம்பு—அடித்தேன் குறி,
இதோ நல்வாள்—அதோ நல்தோள்
உதோஒள்வேல்—ஈவைகொண்டு
பேரார்வத்தோடு மேலாகப் போர்நான்
நேராகச் செய்வேன் நீ நம்புவாயே,
அம்மா—அம்மா—என் அம்மா.”

எனக்குப் போர்புரிய வேண்டுமென்ற ஆசை மிகுகின்றது. நானும் போருக்குச் செல்ல வேண்டும். (வளையொலி கேட்டல்) அதோ கேள். போர்ச் சங்கமும் ஒலிக்கின்றது. நான் போகட்டுமா; என் சொல்லுகிறாய், அம்மா! அம்மா!!

**தேவி-பொன்மொழி** :— என் அருமருந்தன்ன மகனே! நீ கேட்ட போர் வளையொலி என் காதுகளினும் நுழைந்தது. புலிக்குத்தோன்றிய நீ பூனையாவாயா? உனது கருத்துப்படியே போருக்குச் செல்லுக. ஆனால், நீ போர்க்களத்தைப் பற்றி கேட்டறிந் தவனே யொழியக் கண்ணுற் கண் டறியாதவன் அன்றோ?

**இளமதிவாணன்** :— ஆமாம்! காணு விடில் என்னை? கடவுள்பாலன்பு செலுத்துபவர் அவரைக் கண்ணுற் கண்ட பின்போ அன்பு செலுத்துகின்றனர்? போர்க்களம் செல்ல வேண்டும்; சென்று போர் புரிய வேண்டும்; பகைஞரை வெல்ல வேண்டும்என்ற எண்ணங்கள்எல்லாம் எனக்கு மேலும் மேலும் வருகின்றன. அதனால்தான் போர்க்களஞ்சென்று பணியாற்ற விரும்புகின்றேன்.

**தேவி-பொன்மொழி** :— என் செல்வமே! நான் அதற்குத் தடையாகேன். நீ கருதுவதையே நானும் உனக்குச் சொல்லப் போகிறேன். நீ போர்க்களம் போகுமுன் நான் சொல்வதை மட்டும் கருத்தில் நன்றாகப் பதித்துக் கொள்வாய். அஃதாவது, போர்க்களத்தில் உனக்கு முன்னே, கொடியுடன் மலை போல நிற்கும் தேர்க்கூட்டங்களைக் காணுவாய்; தரைவரையில் நீண்டு வளர்ந்த கொம்புகளைக் கொண்டு போர்முழக்கம் செய்யும் வலிய யானைகளைப் பார்ப்பாய்; காற்றெனப் பறந்துக் கறங்கெனச் சுழலும் குதிரைகள் தம் கடிவாளங்களை நெறித்துக் கடித்துத் துடித்து நிற்கும்; இன்னும் நெஞ்சில் உரங்கொண்டு நேர்மைத் திறம்பெற்று அஞ்சாமல்போர்புரியும் காலனையொத்தமறவர்கள் பெருங்கூட்டமாகத் தோன்றுவர். என் உயிரே! நீ அவற்றைக் கண்டு உன் மார்பு பறைகொட்ட, உடல் நடுநடுங்க, ஆண்மை கெட்டு அச்சத்துடன் முன் வைத்த காலைப் பின்வைத்தாலும், அன்றி உன் நெஞ்சம் பகைவரின் அம்பினால் ஊடுருவப்பெற்று போர்க்களத்தில் செங்குருதி வெள்ளத்தில் வீழாது, உன் முதுகு புண்பட்டு நீ உயிர் துறந்திருந்தாலும், நீ உண்டு உன் உயிர் வளர்த்து வாழ்தற்குற்ற என் பாலூறு மார்பை அறுத் தெறிந்து, உன்னைப் பெற்றதால் எற்கு ஏற்பட்ட பழியையும், இழிவையும் போக்கிக் கழுவாய் செய்வேன். மகனே நான் கூறியனவற்றை உளத்திற்கொண்டு போர்க்களஞ் செல்க.

**இளமதிவாணன்** :— என் வீரத்தாயே! தாங்கள் கூறுவன கேட்டேன்; மகிழ்ந்தேன்; வணங்குகின்றேன். என்னைப்பற்றித்

தாங்கள் ஏன் இவ்வாறு ஐயுற வேண்டும்? சற்று முன்தானே தாங்கள் என்னைப்பார்த்து, 'புலிக்குப்பிறந்த நீ பூனையாவாயா?' என்று கூறினீர்கள். நான் ஆண்மை கெட்டவன் அல்லன்; தாங்கள் அஞ்ச வேண்டாம்; என் போன்ற வீரக்காளையர்கள் தம் கடனாகிய உரிமைப் போரிற் கலந்து கொண்டு தமது தொண்டினைச் செவ்வனே புரியப் பின் வாங்க மாட்டார்கள். அம்மையே! எனக்குவிடைதருக. நான்சென்று வருகின்றேன்.

தேவி-பொன்மொழி :— என் உயிர் ஓவியமே! நீ சென்று வெற்றியுடன் வருக! (அணைத்து முத்தந் தருதல்) என் வீரச் செல்வமே! நீ இம் மணமிக்க எண்ணெயினால் நினது தலையை அழகு பெற வாரி முடித்து, அம்மலர்களைச் சூடிக் கொள்க, இப்பட்டாடைகளை இடையிற்செம்மைபெற உடுத்திக்கொண்டு, நினது போர்ப்படைகளைத்தாங்கி அமர்க்களம்செல்க, (தலையைச் சீவி, மலர்முடித்து, உடைஉடுத்தி, படைக்கலம்வழங்கி, கண்ணேறு கழித்தல்)

இளமதிவாணன் :— சென்று வருகின்றேன். இனிய என் அன்னாய்! சென்று வருகின்றேன். (வணங்கிச்செல்லுதல்.)

தேவி-பொன்மொழி :— ஆ அ. என் செல்வமே! நீயும் என்னைப்பிரியுநாள் வந்ததே. முருக! அவனைக்காத்தல் நின்பாரம். (பெருமூச்செறிதல்)

தோழி-தேமொழி:—அன்னாய் கண்கலங்காதீர்கள்! முருகன் அருள்புரிவன். (தனித்து) அடியவர் துயர்களையும் அம்மை வள்ளி மணாளா! எம்பிள்ளை பால்மணம்அறாதவன்; பயிற்சியில்லாதவன்; ஒருகுடிக்கு ஒருமகன்; அவன் புகழ்பெற, வெற்றிபெற, துயர் நீங்கக் காப்பது நின் அருள். ஓம் முருகா. (வணங்குதல்)

காட்சி முடிவு

# தொல்காப்பியமும் சங்க நூல்களும்*

வித்வான் மா. இராசமாணிக்கம் அவர்கள் B.O.L.

தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

தமிழ் அறிவிலும் ஆற்றலிலும் பெரும் புகழ்பெற்று விளங்கும் திரு. பண்டிதமணி அவர்களும், திரு. நாட்டார் அவர்களும், என் ஆசிரியர் திரு. வேங்கடாசலம் பிள்ளை அவர்களும் ஆக இம்மூன்று பேரறிஞர்களும் பேச இருக்கும் இப்பேரவையில் அறிவிலும் ஆற்றலிலும் உருவிலும் திருவிலும் மிக இழிந்துள்ள யான் பேசுதல் தக்கதன்றாயினும், அப்பேரறிஞரின் அன்பையும் ஆதரவையும் உறுதுணையாக்கொண்டு பேசத்துணிந்தேன். அப் பேரறிஞர்கள் அவசியம் அவையடக்கம் கூறியேதீர்வர். அவர்கள் அவையடக்கம்கூறி, அவர்களை எவ்வாற்றானும் ஒவ்வாத நானும் அவையடக்கம்கூறின், 'அவையடக்கம்' என்பதற்குரிய மதிப்பே கெட்டுவிடுமே என்றஞ்சியே அவையடக்கம் கூறாது, எனது பொருள்பற்றிச் செல்வேன்.

'தொல்காப்பியமே சங்க நூல்களுள் ஒன்றாக இருப்ப, அதனைத் தனியே கூறியிருத்தல் எதற்கு?' எனச் சிலர் எண்ணுதல் இயல்பு. 'இடைச் சங்க நூல்கட்கும் கடைச்சங்க நூல்கட்கும் இலக்கணம் தொல்காப்பியம்' என உரையாசிரியர்கள் கூறியிருத்தலாலும், சங்க நூல்களில் தொல்காப்பியம் ஒன்றே இலக்கணமாகவும் ஏனைய அனைத்தும் இலக்கியமாக இருத்தலாலும், தொல்காப்பியத்தைப் பிறவற்றினின்றும் வேறுபிரித்து 'சங்ககால இலக்கணமும் இலக்கிய நூல்களும்' என்னும்பொருள் படும்படி இத்தலைப்புக் கொடுக்கப்பட்டது. இனி, இவ்விரு வேறுபட்ட நூல்களைத் தனித்தனியே ஓரளவு (நேரம் இன்மையால்) மேற்போக்காக ஆராய்ந்து, முடிபு கூறலே இச் சொற்பொழிவின் நோக்கமாகும்.

---

* இது, காந்தைத் தமிழ்ச்சங்கத்து 28-ம் ஆண்டுவிழாவின்போது (19—8—'39) யாழ்ப்பாணத்துப் பரமேசுவரர் கல்லூரித் தலைவர் திரு. சு. நடேசபிள்ளை B.A., B.L. அவர்கள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவு.

## தொல்காப்பியம்

தொல்காப்பியம், பலர் நினைத்தல் போலத் தமிழ் இலக்கணத்தை விரித்துரைக்கும் நூலன்று; தொகுத்துக் கூறும் நூலே ஆகும். இவ்வுண்மையைத் தொல்காப்பியச் சூத்திரங்கள் 1602-ஐயும் கூர்ந்து படிப்போர் நன்கறிதல் கூடும். தொல்காப்பியர், தாம், நூல் செய்யப் புகுந்த காலத்தில் இருந்த—ஒவ்வொன்றையும் பற்றிய—விரிவான இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் முற்றக்கற்றே அவற்றின் சாரத்தை உள்ளடக்கியசுருக்கநூல் (Abridged Edition) செய்தார் என்பதை அவர் சூத்திரங்களே பறையறைகின்றன: தொல்காப்பியச் சூத்திரங்கள் ஏறக்குறைய 1600 ஆகும். அவற்றுள் சுமார் 260 இடங்களில் தொல்காப்பியர், தமக்கு முன்பு இருந்தவரும் தம் காலத்தில் இருந்தவரும் ஆன இலக்கண ஆசிரியர் பலரைப் பலபடியாகக் குறிப்பிட்டுக் கூறலே இதற்குப் போதிய சான்றாகும்.

(1) "என்ப—மொழிப" என்னும் முறைமைதொல்காப்பியம் முழுவதும் ஏறத்தாழ 147 இடங்களில் வந்துள்ளன.

(2) "என்மனார் புலவர்" என்பது சுமார் 68 இடங்களில் வந்துள்ளன.

(3) "வரையார்" என்பது 15 இடங்களில்வந்துள்ளன.

(4) பிறசிறப்புடன் வந்துள்ள தொடர்கள் சுமார் 30ஆகும். இத்தொடர்கள் தாம் சுவையுடையவை. ஆதலின் அவற்றை அதிகார முறைமைப்படி ஒன்றன் பின் ஒன்றாக இங்குக் காண்போம்.

I. எழுத்ததிகாரத்தில்:—

(1) "நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே" சூ. 7.
(2) "ஒத்த தென்ப உணரு மோரே" சூ. 193.
(3) "செவ்வி தென்ப சிறந்திசி னோரே" சூ. 295.
(4) "புகரின் றென்மனார் புலமை யோரே" சூ. 369.

II. சொல்லதிகாரத்தில்:—

(1) "உளவென மொழிய உணர்ந்திசி னோரே" சூ. 116.
(2) "வழுக்கின் றென்ப வயங்கி யோரே" சூ. 139.
(3) "விளியொடு கொள்ப தெளியு மோரே" சூ. 153.
(4) "ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே" சூ. 158.

III. பொருள் அதிகாரத்தில் :—

(1) " இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே " சூ. 4
(2) " புலனன் குணர்ந்த புலமை யோரே " சூ. 14
(3) " கொள்ளும் என்ப குறியறிந் தோரே " சூ. 50
(4) " நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே " சூ. 310
(5) "இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே" சூ. 375
(6) "வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர் " சூ. 381
(7) "யாப்பென மொழிப யாப்பறி புலவர் " சூ. 383
(8) "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர் " சூ. 384
(9) "பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே" சூ. 403
(10) "ஒன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே சூ. 406
(11) "தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்" சூ. 407
(12) "நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே" சூ. 457
(13) "ஒத்தென மொழிப உயர்மொழிப் புலவர் சூ. 472
(14) "தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப" சூ. 474
(15) "மறைஎன மொழிதல் மறையோர் ஆறே" சூ. 487
(16) "ஆங்கென மொழிப அறிந்திசி னோரே" சூ. 514
(17) "தோலென மொழிப தொன்னெறிப் புலவர்" சூ. 539
(18) "புலனென மொழிப புலனுணர்ந் தோரே" சூ. 542
(19) "நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" சூ. 571
(20) "நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்" சூ. 644
(21) "சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்" சூ. 646

சுவை பயக்கும் இத்தொடர்களை அவையுள்ள இயல்களையும் சூத்திரங்களையும் கொண்டு ஆராய்ந்து முடிபுகூறல் அழகிதாகும். அதற்குப் போதிய நேரம் இன்மையாலும், மேல் நோக்காகப் பார்ப்பினும் இத்தொடர்கள் பலதுறைப் புலவர்களைச் சுட்டுதல் தெற்றென விளங்குதலாலும் விரிவஞ்சித் தொடர்களை மட்டும் சுட்டி விடுத்தனம். இவற்றை நோக்கும் அறிஞர் சிறப்பாக 4, 5, 7, 8, 9, 11, 12, 14, 15, 17, 21-ம் எண்கள் சுட்டும் தொடர்களைக் காண்கையில் யாம் கூறும் உண்மையை எளிதில் உணர்வர்.

தொல்காப்பியச் செய்யுளியல்உரை, யாப்பருங்கல விருத்தியுரை, காரிகை உரை—இவற்றை ஆய்ந்து யாப்பறி புலவரைச்

சரித்திரக் கண்கொண்டு காலமுறைப்படி வைப்பின், தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டவரும் சமகாலத்தவரும் ஆன யாப்பறி புலவர் அகத்தியர், 'செயிற்றியம்' ஆசிரியர், 'செயல் முறை' ஆசிரியர், மயேச்சுரர், பெருங்காக்கைபாடினியார், பல்காயனார், நற்றத்தனார், அவிநயர், வாய்ப்பியர் முதலியோர் ஆவர்[1]. கேவலம் இப்போழ்து கிடைக்கும் இவ்வுரைகளைக் கொண்டு பார்க்கையில் இத்துணைப் புலவர் இருந்தனர் என்பது தெரிகிறதெனின், அவர்கள் செய்த நூல்களும் பிறவும் இருப்பின் வேறு பல ஆசிரியர்கள் இருந்தனர் என்பதை நாம் அறியக் கூடும் அன்றோ?

## தொல்காப்பியர் காலம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தைப்பற்றிய பரந்துபட்ட இலக்கண நூல்களின் சாரத்தைத் தமது காலத்துக்கு ஏற்பச் சுருங்கக்கூறிய தொல்காப்பியர் எக்காலத்தினர்?--இதனை அறிதற்குப் பனம்பாரனார் பாயிரமும் நூலுள் உள்ள சில சூத்திரங்களுமே சாலும்.

I. பாயிரம்:—(1) பாயிரத்துள் தமிழகத்துத் தெற்கெல்லை 'குமரி' என்பது. இதனை யாறென்றே உரையாசிரியர் அனைவரும் கொண்டனர். இப்போதுள்ளது குமரிமுனை.

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாடு"

என்று சிலப்பதிகாரம் கூறலால், அதன் காலமாகிய கி.பி. 2-ம் நூற்றாண்டில் தமிழகத்தின் தெற்கெல்லை 'குமரிமுனை' என்பது வெளியாம். கடைச்சங்கப் புலவராய சிறுகாக்கைப் பாடினியார் பாடலிலும்தென் எல்லைக்கடலாகவேகூறப்பட்டுள்ளது. எனவே, கடைச்சங்கத்தார் காலத்தில் குமரி முனையே தெற்கெல்லை என்பதில் ஐயமில்லை. ஆதலின், கடைச்சங்க காலத்திற்கு முன் குமரியாறு தெற்கு எல்லையாக இருந்திருத்தல் வேண்டும். கடைச்சங்கத்தின் தொடக்கக்காலம் ஏறக்குறைய கி. மு. 4-ம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பர் திரு. மு. இராகவையங்கார் அவர்கள். [இம்முடிபு ஏறத்தாழ உண்மையானதென்பதை விளக்கக் கூடுமாயினும், அது 'மற்றொன்று விரித்தல்' ஆகுமாதலின், அதனையே தற்போது முடிபாகக்கொண்டு, மேற்

[1]. Vide my article 'யாப்பிலக்கணநூல்கள்' in Sentamil Selvi, Vol .15.

செல்வோம்.] எனவே, கி. மு. 4-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே குமரியாறு தமிழகத்தின் தெற்கெல்லையாக இருந்திருத்தல் வேண்டும். அக்காலத்தில் தொல்காப்பியம் செய்யப்பட்டதாதல் வேண்டும். "இடைச்சங்க காலத்தில் தொல்காப்பியம் செய்யப் பெற்றது. அப்போது பாண்டியன் தலைநகரம் கவாடபுரம் (அலைவாய்) அது கடல் கொண்டது" எனவரும் களவியல் கூற்றாலும் தொல்காப்பியம் கடைச் சங்கத்துக்கு முற்பட்டதென்பது தெளிவு. "இலக்கண ஆசிரியர்கள், தம் காலத்தனவும் முந்தியனவுமான செய்யுட்களைக் கொண்டு இலக்கணம் செய்தல் மரபு. பரணர், கபிலர், நக்கீரர் இவர்கட்குப் பிற்பட்டவர் தொல்காப்பியராயின், அவர் தம் பாடல்கட்குமுரணாக விதிகள் செய்திரார் அல்லவா? தொல்காப்பியச் சூத்திர விதிகட்கும் அப்புலவர்களின் செய்யுள்களில் காணப்படும் சொற்களுக்கும் சொற்றொடர்க்கும் சிறந்த இலக்கண மாறுபாடுகள் இருத்தல் ஒன்றே தொல்காப்பியர் கடைச்சங்கப் புலவராய பரணர் முதலியோர்க்கும் பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவராவர்" என்று அறிஞர் அறைவர்[1]. எனவே, தொல்காப்பியர் கடைச்சங்கத்துக்கு முற்பட்டவர் என்பதும் களவியல் உரைப்படி இடைச்சங்கத்தார்என்பதும் தெளிவு. எனினும் ஏறத்தாழ ஒருகாலம் குறிப்பிடல் நன்றாகும்.

களவியல் உரையிலும் அடியார்க்கு நல்லார் உரையிலும் சிலப்பதிகாரத்திலும் முல்லைக் கலியிலும் கூறப்படும் கடல் கோள்கள் இரண்டு. ஒன்றால் தென்மதுரை அழிந்தது; மற்றொன்றால் கவாடபுரம் அழிந்தது. முதற்கடல்கோள் 'பஃறுளி யாற்றுடன்பன்மலைபடுக்கத்துக்குமரிக்கோடும்'கொண்டதாகும். அதனில் 49நாடுகள் அழிந்தன என்பர் அடியார்க்கு நல்லார். தமிழகத்தை அடுத்துள்ள இலங்கைவரலாற்றை இதுபோழ்து ஆய்தல்அருந்துணை அளிப்பதாகும். தீபவம்சம், மஹாவம்சம், இராஜாவளிஎன்னும் இலங்கைவரலாற்று நூல்களில்மூன்றுகடல் கோள்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. முதற்கடல் கோள் இந்தியாவுடன் இணைந்திருந்த ஈழத்தைப் பிரித்துவிட்டது; அதன்காலம் கி. மு. 2378; இரண்டாம் கடல்கோள் கி. மு. 504-ல் ஏற்பட்டது; அப்போழ்து ஈழத்தின் பெரும்பகுதி கடலுள் ஆழ்ந்தது; மூன்றாம் கடல்கோள் கி. மு. 306-ல் உண்டானது; ஆனால் பெருத்த சேதம் இல்லை, என்று அவை அறைகின்றன.

---

1. V. V. Reddiar's 'Paranar' pp. 172, 173.

இலங்கையில் உண்டாகும் கடல்கோள்கள் அதனை அடுத்துள்ள தமிழகத்துக்கு ஊறுவிளைத்தல் இயல்பே அன்றோ? இம்மூன்று கடல் கோள்களில் மூன்றாவது தொல்காப்பியர் காலத்தில் நடந்ததாகக் கொள்ளல் இயலாதென்பதைக் கடைச் சங்கத்தொடக்கம் கி. மு. 4-ம் நூற்றாண்டாகலாம் என்னும் முடிபாலும் பிற காரணங்களாலும் நன்கறியலாம்.

கி. மு. 2378-ல் ஏற்பட்டது முதற்கடல்கோள் ஆதலின் அக்காலமும் தொல்காப்பியர் காலமாதல் அரிது. என்னை? 'அக் காலமே தென்மதுரையும் 49 நாடுகளும் பஃறுளியாறும் கடல் கொண்ட காலமாதலின் என்க. எனவே, இரண்டாம் கடல் கோளே கவாடபுரம் அழிந்தகாலமாக இருத்தல் வேண்டும். கி. மு. 4-ம் நூற்றாண்டில் சாணக்கியரால் இயற்றப்பட்ட அர்த்த சாஸ்திரத்தில் கவாடபுரம் குறிக்கப்படல் காணத்தக்கது. கி.மு.7-ம் நூற்றாண்டினர் எனக்கருதப்படும் வான்மீகிமுனிவர் செய்த இராமாயணத்துள் கவாடபுரம் குறிக்கப்பட்டுள்ளது. கடைச்சங்ககாலத்தில் இப்போதைய மதுரையே தலைநகரம் என்பதில் ஐயமில்லை. எனவே, இலங்கையில் இரண்டாம் கடல் கோள் உண்டானகாலமே கவாடபுரம் அழிந்தகாலமாக இருத்தல் கூடும். ஆகவே, தொல்காப்பியர் அந்த கி. மு. 6-ம் நூற்றாண்டினர் (கடல்கோளுக்கு முற்பட்டவர்) எனக் கோடல் தவறாகாது. இம் முடிபையே பிற சான்றுகளும் அரண் செய்தல் கீழ் வருவன வற்றால் அறியத்தகும்.

(2) பாயிரத்துள் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனக் கூறியிருத்தல் கவனிக்கத் தக்கது. வடமொழி இலக் கணத்துள் தலை சிறந்ததாக 2000 ஆண்டுகட்கு மேலாக வட மொழிப் புலவரால் கருதப்பட்டு வருவது "பாணினீயம்." பாணினி என்பவர் காலம் கி. மு. 7-ம் நூற்றாண்டு என்பதைக் **கோல்ட்ஸ்டகர்** போன்ற மேனாட்டாராய்ச்சியாளரும் வட மொழிப் பண்டிதர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். அந்நூல், தான் தோன்றியவுடன் முன்னூல்களை மூலையிற் கிடத்தி வட மொழியுலகில்தனிக்கோல் ஓச்சியதென்பதை எவரேஅறியார்? அத்தகைய மேம்பாடுற்ற இலக்கண நூலைத் தொல்காப்பியர், அது, தம் காலத்தில் தமிழ் அகத்தில் இருந்திருக்குமாயின் படியாதிருப்பரோ? படித்துப் புலமை வாய்ந்து, "பாணினீயம் நிறைந்த தொல்காப்பியன்" என்றன்றோ பெயர்பெற்றிருப்பர்! அதற்கு முற்பட்ட 'ஐந்திரம் நிறைந்தவர்' எனக்கூறப்படலால், அவர், பாணினீயத்தைப் பாராதவர்—பாணினிகாலமான கி. மு. 7-ம் நூற்றாண்டுக்குச் சிறிது முன் அல்லது பின் இருந்தவர்

எனக்கொள்ளலாம். பாணினீயம் ஆரியாவர்த்தத்தில் கி. மு. 7-ம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. அஃது, அவ்விடத்தே சிறப்புற்ற பிறகன்றே, அங்கிருந்து தென்னாடு போந்த மக்களால் தமிழகத்துக்குக் கொண்டு வரப்பட்டிருத்தல்வேண்டும். அந்நூல் வடநாட்டில் சிறப்படையவும், பின் தமிழகம் வந்து பெயர் பெறவும் குறைந்தது இரண்டு நூற்றாண்டுகளேனும் ஆகி இருத்தல் கூடியதே. அஃதாவது, அந்நூல் கி. மு. 5- அல்லது 4-ம் நூற்றாண்டிற்றான் தமிழகத்துள் வந்திருத்தல் கூடும். ஆதலால், அதன் வருகைக்கு முற்பட்டவராகிய தொல்காப்பியர் அதனைப் பார்த்திருத்தல் இயலாததாம்.

வடமொழியாளர் தமிழகம் வந்தது சுமார் கி. மு. 1000-ல் என்பர் **வின்ஸன்ட் ஸ்மித்** போன்ற சரித்திராசிரியர். அஃதாயின், அக்காலத்திய வடமொழி இலக்கண நூலான—பாணினீயத்துக்கு முற்பட்டதான—'ஐந்திரம்' ஒன்றையே அவ்வடநாட்டார் தமிழகம்கொண்டுவந்தனர் ஆதல்வேண்டும். அதனையே தொல்காப்பியர் பயின்றிருத்தல் கூடும்; அதனாற்றான் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனப்பட்டார். இவ்விரண்டாம் கூற்றாலும் தொல்காப்பியர் ஏறத்தாழக் கி. மு. 5-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது போதரும். இனி, தொல்காப்பியர் சூத்திரங்களைக் கொண்டே அவர் காலம் யாதெனக் காண்போம்.

II. சூத்திரங்கள் :—(1) பொருளதிகாரம்—கற்பியல் சூ.36-ல் தமிழகம் புகுந்து வாழ்ந்துவந்த பார்ப்பார்க்கு உரிய அகத்துறைத் தொழில்கள் கூறப்பட்டுள்ளன :

"காமநிலை உரைத்தலும் தேர்நிலை உரைத்தலும்
கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்
மாவொடு பட்ட நிமித்தம் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய."

இத்தொழில்களை நோக்கத் தமிழகம் புகுந்த பார்ப்பனர் தமிழரோடு ஓரளவு தொடர்பு கொண்டுவிட்டனர் என்பது வெளியாம். ஆயின், இத்தொழில்களோடு, தொகை நூல்களிலும் சிலப்பதிகார, மணிமேகலைகளிலும் பார்ப்பார் அரசர் மதிப்பிற்கு உரியவராக இருந்தமையும், அவர் சொற்படி அரசர் வேள்வி செய்தமையும், அவரிடம் அறவுரை கேட்டு நடந்தமையும் பிறவும் அறியலாம். இக்குறிப்புகள் வரும் நூல்களும்

செய்யுட்களும் கடைச் சங்கத்தன ஆயின், அவற்றின் காலம் முற்கூறியாங்குக் கி. மு. 4-ம் நூற்றுண்டாயின், தொல்காப்பியத்தில் குறிப்பிட்ட பார்ப்பார்க்கு உரியதொழில்கள் கி.மு. 4-ம் நூற்றுண்டுக்கு முற்பட்டவை ஆதல் அறிக.

(2) இனி, அவர்கள் பேசி வந்த வடமொழியும் அதன் சிதைவான பிராகிருத மொழியும் தமிழகத்தில் சிறுபான்மை வேரூன்றத் தொடங்கின; தமிழ் மொழியிலும் இடம்பெற்றன. இக்காரணத்தால் தான்,

"வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (சொல்-401.) எனவும்,
"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்" ,, 402.

எனவும் தொல்காப்பியர் இவ்விரு வேறுபட்ட அந்நியமொழிகள் தமிழிற் கலத்தற்கு இலக்கணம் கூறினர்.

கி. மு. 4-ம் நூற்றுண்டிலிருந்து தொடங்கப்பெற்ற கடைச் சங்கத்தில் செய்யப்பெற்ற பெரும்பாலான தொகைநூற் செய்யுட்களிலேயே பிறசொற்கள் ஏறத்தாழ 100-க்கு 4-வீதம் காண்டல் அருமை. எனவே, தொல்காப்பியர் காலத்தில் அவை அருகியே தமிழில் வழங்கி இருத்தல்வேண்டும். அங்ஙனம் அருகி வழங்கிய காலம் வடமொழியாளர் வந்து தங்கித் தமிழரோடு நெருங்கியும் நெருங்காமலும் வாழ்ந்த சில நூற்றுண்டுகள் கொண்டதாகும். முற்கூறியாங்கு அவர்கள் குடியேறியகாலம் சுமார் கி. மு. 1000 எனின், அவர் தம் மொழிகள் தமிழில் அருகிப் பழகப்பெற்ற நூலுள் இடம்பெற்ற காலம் சுமார் கி. மு. 7அல்லது 6-ஆம் நூற்றுண்டெனக் கோடல் தவறுகாது. சுமார் 150 ஆண்டுகளாக ஆங்கிலமொழியை நம்மவர், தாய் மொழியினும் பரிவோடு கற்றுவரினும் இலக்கணத்தில் இடம் பெறுமை இங்குச் சிந்திக்கற்பாலது! இதுகாறும் கூறிய விளக்கத்தால் தொல்காப்பியர் காலம் ஏறத்தாழக் கி. மு. 7 அல்லது 6-ஆம் நூற்றுண்டெனக் கொள்ளக் கிடத்தல் காண்க.

(3) இனி, "சிதைந்தனவரினும் இயைந்தன வரையார்" என்னும் எச்சவியல் சூத்திரம் நமது ஆராய்ச்சிக்கு உரியதாகும். அச்சூத்திரப் பொருள் சிறந்த சரித்திரச் சான்றுதரும் வன்மையுடையது. இச்சூத்திரவுரையில், "வட எழுத்தால் இயன்ற வடசொல் சிதைந்துவரினும் பொருத்தமுடையன செய்யுளிடத்துவரையார்" என்றும், 'சிதைந்தனவரினும்' எனப்பொதுப்படக்கூறிய அதனுல் ஆணே, வட்டம், நட்டம், கண்ணன் எனப் பாகதமாய்ச் சிதைந்து வருவனவும் கொள்க" என்றும் சேனுவரையர் கூறியிருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது.

'பாகதம்' என்பது 'பிராகிருதம்' என்னும் மொழி. அது பல பிரிவுகளையுடையது. தூய வடமொழியும், வட இந்தியாவில் ஆரியர் நுழைந்து குடியேறியபோது அங்கு இருந்த பழைய திராவிடமும் நாளடைவில் கலந்து இரண்டும் கெட்டதால், அவ்விரண்டினது கலப்பால் உண்டானவையே பிராகிருத மொழிகள் என்பவை. இவற்றுள் ஒன்றே கி. மு. 6-ஆம் நூற்றுண்டில் புத்தர் பேசிய பாலிமொழி. இதுவே அந்நூற்றுண்டில் ஆரியாவர்த்தத்தில் சிறப்பாகப் பேசப்பட்டுவந்தது. அப்பிராகிருத மொழிகள், அலெக்சாண்டர் முதலியோர் படையெடுப்புக்களாலும் பலநாட்டார் குடியேற்றத்தாலும் வந்த பல்வேறு மொழிகளோடு கலந்து, நாளா வட்டத்தில் சிதைந்து உருமாறி இன்றைய 'இந்திய ஆரிய மொழிகளாக'த் தோற்றமெடுத்தன. இதுவே வடஇந்திய மொழிகளின் வரலாறு. பிராகிருத மொழிக்ள் இத்தகைய கலப்பு அடையத் தொடங்கிய காலம் அலெக்சாண்டர் படையெடுப்பு நடந்த கி. மு. 4-ஆம் நூற்றுண்டின் தொடக்கம் எனக்கோடல் பொருந்தும். இக்கலப்பு ஏற்படாமுன் வட இந்தியாவில் பேரளவு பேசப்பட்டு வந்த பிராகிருத மொழிகள், படையெடுப்பையே அறியாத தமிழகத்தில் குடியேறிய வடநாட்டார் சிலரால் பேசப்பட்டதாகும். அது தென்னுட்டில் நன்ருகப் பரவத்தொடங்கியது, கி. மு. 4-ம் நூற்றுண்டிலிருந்துதான். என்னை ? கி. மு. 4-ம் நூற்றுண்டிற்றுன் பிராகிருதத்தில் வல்லவரான சமணர் தமிழகம் புகுந்தனர் ; கி. மு. 3-ம் நூற்றுண்டில் பௌத்தர் தமிழகம் புகுந்தனர். என ஆராய்ச்சியாளர் அறிந்து கூறலின் என்க. அக்காலம் தொல்காப்பியர்க்கு முற்பட்டதாதலின், அவர் காலத்தில் பிராகிருதச் சொற்கள் மிகச் சிறிய அளவிலேயே தமிழகத்தில் பரவி இருந்தன என்பது வெளியாம். இதனை, அவர் சூத்திரத்துள் உள்ள எதிரது தழுவிய எச்ச வும்மையும் நமக்கு உணர்த்துதல் காண்க. அவர் காலத்தில் பிராகிருதச் சொற்கள் மிகுதியாக (பிற்காலத்தில்வழங்கியனபோல) வழங்கியிருப்பின், அதனை உம்மையாற்பெற வைத்திருக்க மாட்டார். எனவே, சமணமும் பௌத்தமும் பிராகிருத மொழியோடு தமிழகம் நுழையாத காலத்தில் இருந்தவர் தொல்காப்பியர் என்பது தெளிவாம். மேலும், தொல்காப்பியத்தில் ஓரிடத்திலேனும் சமணமோ, பௌத்தமோ பற்றிய குறிப்பே இல்லை! இல்லை!! இதனாலும் தொல்காப்பியர் கி. மு. 4-ம் நூற்றுண்டுக்கு முற்பட்டவர் என்பதறியத்தக்கது.

இதுகாறும் கூறப்பெற்ற பல்வேறு சான்றுகளால் **தொல்காப்பியர் ஏறத்தாழக் கி. மு. 6-ம் நூற்றாண்டினர்** எனக் கோடல் பொருந்துவதாகும். இனிச்சங்க இலக்கியங்களைச் சிறிது காண்போம்.

## சங்க இலக்கியம்

இப்போதுள்ள சங்க நூல்களுள் சிறந்தவை தொகை நூல்களே. அவற்றில் உள்ள பாக்கள் ஒரு காலத்தன அல்ல; ஒரு புலவரால் பாடப்பட்டவையும் அல்ல. பல்வேறு புலவரால் பல்வேறு காலங்களில் பாடப்பட்டவை; பஃறுளியாறு இருந்த காலமுதல் கி. மு. 1000-க்கு முற்பட்ட வான்மீகி முனிவர் காலமும் உள்பட்ட கி. பி. 3-ம் நூற்றாண்டுவரை உள்ளிட்ட காலத்துப்புலவர் பலரால் செய்யப்பெற்றவை. எனவே, ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு உட்பட்ட கால எல்லையில்வாழ்ந்த தமிழ் நெடுநில மன்னர் — குறுநில மன்னர் — வள்ளல்கள்— புலவர் முதலியோர் பாடல்களுள் அழிந்தன போக எஞ்சிய தொகுதியே இற்றைய எட்டுத்தொகை நூல்களாம். எனவே, **அவற்றைக் கடைச்சங்க நூல்கள் எனல் அத்துணைப் பொருத்தமன்று.** அவற்றை ஆராய்ச்சி அறிவோடு படிப்பவர் அவை, (1) வடமொழிக் கலப்பற்ற பாக்கள் (2) வடமொழிக் கலப்புடைய பிற்காலப் பாக்கள் என இரு திறத்தனவாகப் பிரிக்கத் தக்கன என்பதை உணர்தல் கூடும்.

அ. முதல் பிரிவில் அடங்கிய செய்யுட்களை ஆராயின், அவை,

1. இயற்பெயர் சிறுவரவிற்றாக இருந்த காலத்தவை
2. வடமொழியாளர் தொடர்பு இல்லாத— மிகுதியாகக் கலவாத காலத்தவை
3. வடசொற்கள் வழங்கப் பெறாத காலத்தவை
4. ஆராய்ச்சியாளர் கூறும் சரித்திர காலத்துக்கு (கி. மு. 500-க்கு) முற்பட்டவை
5. வடநாட்டு நால் வருணம் இல்லாத காலத்தவை
6. ஐந்திணை மக்களும்—அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் தமிழ் மரபினரும் இருந்த காலத்தன

என்பன போன்ற அரிய செய்திகளை அறியலாம்.

ஆ. பிற்காலப் பாக்களை ஆராயின்,

1. ஆரியர் கலப்பு அதிகமாக ஏற்பட்டது
2. தமிழில் வடசொற்களும் பாகதச் சொற்களும் முன்னையவிட மிகுதியாகக் கலக்கலாயின
3. வடநாட்டு நால்வருணம் தமிழகத்துள் புகுந்தது
4. வடஆரியரோடு போர்கள் பல நடந்தன

என்பன போன்ற செய்திகளை அறியலாம்.

புறநானூறு முதலிய தொகைநூல்களால் ஏறத்தாழ (பஃறுளியாற்றுப் பாடலை நீக்கி) சரித்திரத் தொடர்பான பல செய்திகளை அறியலாம்.

1. கி. மு. 1400- கி. மு. 800 எனக்கூறத்தகும். இதிகாச காலத்தில் பாரதப் போரில் கலந்த பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப் பற்றிய குறிப்பு.
2. அதே காலத்தில் வாழ்ந்த தரும புத்திரனைப் பற்றிய குறிப்பு.
3. அதற்குச்சிறிதுபின்னுக வாழ்ந்த வான்மீகியார் பாடல்.*
4. தொல்காப்பியர் காலத் தமிழக நிலைமை.
5. கி. மு. 4-ம் நூற்றாண்டினரான நந்தர்களைப் பற்றிய பாடல் குறிப்புகள்.

" பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇ கங்கை
நீர்முதல் காந்த நிதியம் கொல்லோ ! " (அகம் 265.)

6. கி. மு. 3-ம் நூற்றாண்டினனுன பிந்து சாரனல் தமிழகத்தில் உண்டான மோரியர் படையெடுப்பு.
7. கி. மு. 4, 3-ம் நூற்றாண்டுகளில் சமணர், பௌத்தர் தமிழகத்தில் குடியேறியமை.
8. கி. மு. முதல் நூற்றாண்டில் கரிகாலனது இமயப் படையெடுப்பு.
9. கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளைப் பற்றிய பல குறிப்புகள்.

*Vide T. Narayana Iyengar's article on 'Vanmiki & Tamil' in 'Sentamil' Vol. 36.

**10.** கி. பி. 2-ம் நூற்றுண்டில் இருந்த **'சதகர்ணி'** எனப் படும் ஆந்திர அரசர்கள், **கயவாகு** மன்னன் இவர்களைப் பற்றிய குறிப்புகள்.

சங்க இலக்கிய நூல்களை மேலும் துருவி ஆராயின் சரித்திரச் சான்றுகள் பல கிடைக்கலாம். இதுகாறும் கூறிவந்த செய்தி களால் சங்கஇலக்கியம் ஏறத்தாழ 1500 ஆண்டுகட்கு உட்பட்ட செய்யுட்களை உடையதென்பது அறியக்கிடக்கின்றது. எனவே, இவ்விலக்கியத்துள் இடைச்சங்கப் பாக்களும் கடைச்சங்கப் பாக்களும் உள எனல் தாமே போதரும். தொல்காப்பியர்க்கு முற்பட்ட பாக்களும் சங்கநூல்களில் உண்டு என்பதை உணரல் வேண்டும். (தொடரும்)

உ

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரி
இருபத்து மூன்றுவது ஆண்டுவிழாவின்போது தலைமை ஏற்ற
திருவையாற்று அரசர்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்
கரந்தைக் கவியரசு திருவாளர்,

# R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கட்கு

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி ஆசிரியர்கள் அளித்த

# வரவேற்பு வாழ்த்து

பூமருவும் பொழிலாரும் புகழ்கரந்தைத் தமிழ்ச்சங்கப் பெருங்கல் லூரி
மாமருவும் ஆண்டுவிழா மாண்புபெறத் தலைமைகொள மகிழ்ந்த வன்பன்
பாமருவு மையாற்றுக் கல்லூரிப் பேராசான் பண்பார் மேலோன்
கோமருவு சங்கவலம் வினைந்துழைத்தோன் கோத்தலைமை கொண்டு வாழி!

தொன்மைநெறி மிகப்போற்றுந் தொல்காப்பி யத்துறையைத் துருவி [யாய்ந்தே
தொன்மைமணந் தருதெய்வச் சிலையருரை தொகுத்தளித்த தூயோ [னெங்கள்
தொன்மைநிறை நண்புடையான் ஞென்னூல்க ளாய்ந்துரைக்குந் தூய [வாசான்
தொன்மைநலப் பாப்போன்றே தொடையியற்றுந் திறலுடையான் தோலா [நாவான்.

நலங்கனிந்த வுரைவிரிப்பான் நாவலர்கள்வியக்கும்வகைநயங்கள் சொல்வான்
பொலங்கனிந்த இசைப்பாக்கள் இவன்போலஇயற்றுவதிற் புலமைபெற்றே
வலங்கனிந்தார் அரிதெனுநல் வாய்மொழிக்கோர் சான்ருக வகுத்துக்கூறின்
புலங்கனிந்தார் போற்றிடுமெங் கல்லூரித் தமிழ்ப்பாக்கள் புகலு மாதோ!

ஓங்குபெறும் உலகியலில் உயர்துறவில் உயர்நெறியை யுவப்பக்கொண்
டோர்
வீங்குதமிழ் உலகினிலே மேவிவளர் ஆசிரியர், விரும்பி நன்றே
பாங்குடனெம் ஆசிரியர் வேங்கடா சலமெனவே பகரும் பண்ப!
ஈங்குவளர் எங்கரந்தைக் கல்லூரிக் கென்றென்றும் இனியை நீயே!

முத்தமிழிற் கூத்தியலின் முறையறிந்து தொடுத்தெழுது முறைமை
[நின்பால்
வித்தகரும் வியக்கும்வகை வீறிருந்தே விளங்குநெறி விளம்ப லாமோ
முத்தமணி யிணைவனபோல் முன்னுளிற் பின்னுளில் முதிர்ந்த யாவும்
ஒத்தொழுகு மதர்த்தநடை யுன்றனணி யுரைநடையே யுரைக்கற் பாற்றே?

தொடங்கியநல் லுணர்வாலுந் தொண்டாற்றுந் திறனுலுந் தூய்மை
[வாய்ந்தோர்
இடங்கொளுநல் லமைவாலும் இஞ்ஞான்றெங் கல்லூரி இசைபெற் றோங்கி
உடங்கமரும் மாணவர்கள் பலரோடு புலவர்நிலை யொருங்கி யைந்தே
திடம்பெறலால் நின்றலைமைச் சிறப்பினையே எந்நாளுந் தேடி நிற்கும்.

திருவளர்நற் கரந்தைவளர் தமிழ்ச்சங்கக் கல்லூரி திகழ்வுற் றோங்க
குருவளர்நின் றிறமையணி பெருவிருப்பால் கவியரசே! கூறு கின்றேம்
மருவளர்நற் றிருவுடையாய்! மாதமிழின் நிறையுணர்வாய்! மகிழ்வோ டென்
அருவளர்நீ வருகஇவண், தருகநலம் பெருகவளம் வாழி யம்ம! [றும்

## நன்கொடை

### கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரிக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு. நா. லெ. சின்னகிருட்டின நாயுடு (மளிகை, கரந்தை) | அவர்கள் | 50 | 0 | 0 |
| ,, நா. லெ. வேங்கடசாமி நாயுடு (நெல்மண்டி, கரந்தை) | ,, | 35 | 0 | 0 |
| ,, நா. லெ. வரதராசலு நாயுடு (மளிகை, கரந்தை) | ,, | 30 | 0 | 0 |
| ,, நா. லெ. ப. ஆழ்வார்சாமி நாயுடு (மளிகை, கரந்தை) | ,, | 20 | 0 | 0 |
| ,, அ. நே. அ. ஜினகுமார முதலியார் (மளிகை, கரந்தை) | ,, | 1 | 0 | 0 |

முன்பக்கம் 292-ல் திரு. C. வேதாசலம்பிள்ளை அவர்கள் B.A., B.L., 5 ரூபா. என்று திருத்தி வாசிக்கவும்.

### புலவர் கல்லூரிக்கு

| | | | |
|---|---|---|---|
| உயர்திரு. ஞானியார் அடிகளார், திருப்பாதிரிப்புலியூர் | 50 | 0 | 0 |
| திரு. P. மாணிக்கஞ் செட்டியார் அவர்கள் (தாதம்பேட்டை, பழுவூர்) | 35 | 0 | 0 |